நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆடி 20 ஹிஜ்ரி 1427 றஜபு 10 (05.08.2006) சனிக்கிழமை இதழ் 307

# மூதூர் இறங்குதுறையைக் கைப்பற்ற
# நேற்றும் உக்கிர சண்டை

## வெருகல் பாதை மீது கிபிர் குண்டு வீச்சு!

திருகோணமலை —

விமானப்படையின் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் நேற்று மாலை மேற்கொண்ட தாக்குதல் மூலம் வெருகல் படகுப் பாதை தகர்க்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை திருகோணமலையுடன் இணைக்கும் இந்தப் பிரதேசத்தின் மீது கிபிர் விமானங்கள் நேற்று மாலை 5மணியளவில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஈச்சிலம்பற்றிலுள்ள கடற்புலிகளின் முக்கிய முகாம் ஒன்றின்மீதும் கிபிர் விமானங்கள் நேற்றுக்காலை 8மணியளவில் தாக்குதலை மேற்கொண்டதாக படைத்தரப்பு தகவல் வெளியிட்டது.

## டோறா மூழ்கடிப்பெனத் தகவல்

திருகோணமலை —

மூதூர் இறங்குதுறையைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் கடற்படையினர் இறங்கிய போது நேற்று கடும் சமர் மூண்டதாகவும் - இந்தச் சமரில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூதூரிலிருந்து மக்கள் வெளியேறுவதற்கு(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைப்பறிச்சான் முகாம் புலிகள் வசம்

திருகோணமலை —

மூதூர் - கட்டைப்பறிச்சானில் ஜி.பி.எஸ் இராணுவ முகாமிலிருந்து படையினர் வெளியேறிவிட்டதாகத் தெரியவருகிறது. கட்டைப்பறிச்சானில் அமைந்திருந்த ஜி.பி.எஸ் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகளின் மோட்டார் அணியினர் நடத்திய ஆட்லறி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களால் அங்கு நிலைகொள்ள முடியாத படையினர் நேற்று முன்தினம் இரவு அங்கிருந்து தப்பியோடியதாகக் கூறப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சமர்களில் வீரச்சாவடைந்த போராளிகள்!


கிளிநொச்சி —

திருகோணமலையில் இடம்பெற்ற மோதல்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

01.08.2006 அன்று மாவிலாற்றுப் பகுதி எறிகணைத் தாக்குதலின்போது தமிழ்த் தேசிய துணைப்படை வீரரான வீரவேங்கை கோணேஸ்வரன் (வெற்றிவேல் கோணேஸ்வரன் - தோப்பூர் - திருகோணமலை) என்பவர் வீரச்சாவடைந்தார்.

01.08.2006 அன்று கொக்கிளாய் கடல் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் இசைக்கலை (நித்தியானந்தம் சிவானந்தி) பாடசாலை வீதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு!



திருகோணமலை —

மூதூரில் விடுதலைப் புலிகளுக்கும் - படையினருக்கும் இடையில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுவதால் அங்கிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

மூதூரில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக அச்சமடைந்த மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து கந்தளாய், கிண்ணியா போன்ற இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மோதல்களால் மூதூரிலிருந்து பெருமளவான மக்கள் தமது உடமைகளை விட்டுவிட்டு வெளியேறி வருகின்றனர். இவர்கள் பொது இடங்களிலும் மற்றும் வணக்கஸ்தலங்களிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பச்சனூரில் ஷெல் வீச்சு
## பத்து முஸ்லிம்கள் பலி!
### இடம்பெயர்ந்தபோது சம்பவம்

திருகோணமலை —

திருகோணமலை - மூதூரிலிருந்து இடம்பெயர்ந்து செல்லும் மக்கள் மீது படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்தலில் 5முஸ்லிம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மூதூர்ப் பிரதேசத்தில் இருந்து நேற்று கந்தளாய் பகுதி நோக்கி இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்த முஸ்லிம்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஏ15 வீதியில் பச்சனூர் 64 ஆவது மைல்கல் பகுதியிலுள்ள புலிகளின் சோதனைச் சாவடியில் பதிவுகளை மேற்கொண்டிருந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப்பொருட்களை தடுத்த சிங்களக் காடையர்!

திருகோணமலை —

புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள மூதூர் பகுதிக்கு 28 லொறிகளில் உணவுப்பொருட்களை அனுப்ப சர்வதேச செஞ்சிலுவைக் குழு எடுத்த முயற்சி, சிங்களக் காடையர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கும் மூதூர் பகுதிக்கு உடனடி நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு விடுதலைப் புலிகள் அனுமதியளித்தனர்.

இதையடுத்து உணவுப் பொருட்களுடன் மூதூர் நோக்கிப் பயணித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனத் தொடரணி - சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்காகியது. மூதூருக்குள் நுழைய விடாது சேருவில, சுமங்கலபுர பகுதியில் வாகனத் தொடரணியை வழி மறித்த சிங்களக் காடையர்கள்- தொடரணி மீது மேற்கொண்ட தாக்குலையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச்(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரே தாக்குதல் நடத்தினர்
### ரவூப்ஹக்கீம் தெரிவிப்பு



திருகோணமலை —

மூதூர் தெற்கில்- 64ஆம் வாய்க்கால் மைல் கல்லில் அகதிகளாக வெளியேறிவந்த முஸ்லிம் பொது மக்கள், விடுதலைப் புலிகளின் சோதனை முகாமை வந்தடைந்தபோது - படையினர் மேற்கொண்ட ஆட்லறி தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கியின் முகாமையாளர் பொன் கணேசமூர்த்தி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் —

காங்கேசன்துறை மக்கள் வங்கியின் முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி நேற்றுக்காலை இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள இவரது வீட்டில் இருந்து நேற்றுக் காலை 7.45 மணியளவில் அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை தபாற்பெட்டிச் சந்திக்கு செல்லும் ஒழுங்கையில் ஏற்கனவே இரண்டு மோட்டார் சைக்கிளில் காத்துநின்ற ஆயுததாரிகள் இவரைச் சுட்டுவிட்டு ஒரு மோட்டார் சைக்கிளில் பலாலி நோக்கியும் மற்றைய மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கியும் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## படைநகர்வு முறியடிப்பு; ஷெல் வீச்சில் மூவர் பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாகரையில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண்கள் மீது இராணுவத்தினரும் துணை ஆயுதக்குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இந்தப் படை நடவடிக்கைக்கு முன்னோடியாக நேற்று அதிகாலை 4 மணி முதல் 9 மணிவரை பனிச்சங்கேணிப் பகுதியில் இடம்பெற்ற கடும் ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உடல் சிதறிப் பலியாகினர்.

குழந்தைவேல் (வயது 50), குழந்தைவேல் இந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் மடத்தில் கால்நடை சந்தை

நெல்லியடி—

கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் மருந்துப் பொருட்கள் விற்பனை நிலையமும், கால்நடைச் சந்தையும் இன்று காலை 6.30 மணிக்கு நெல்லியடி நாவலர் மடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கால்நடைச் சந்தை பிரதி சனிக் கிழமைகளில் இயங்கும் என கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## குடும்பப் பெண்ணை காணவில்லை

ஏழாலை—

குடும்பப்பெண் ஒருவரை காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குப்பிளான் - ஏழாலையைச் சேர்ந்த இருபிள்ளைகளின் தாயான குமாரசாமி சறோஜினிதேவி (வயது 57) என்பவரையே காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி இவர் வீட்டில் இருந்தபோது திடீரெனக் காணாமல்போயிருந்ததாக முறைப் பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணாமல் போனவர் தொடர்பில் தகவல் அறிந்தோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் அல்லது 0777195482 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கேட்டுள்ளனர்.

## நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு—

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட 2006ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் நெடுந்தீவுப் பிரதேச அபிவிருத்திக்கென மூன்று இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தானைத்துறை வீதி, வெல்லை வீதி ஆகியவற்றுக்கான மின்சார விநியோகத்துக்கென தலா 50 ஆயிரம் ரூபாவும், சீக்கிரியாம்பள்ளம் வீதி மின் விஸ்தரிப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும், நெடுந்தீவு மகாவித்தி யாலயத்துக்கு சிறுவர் பூங்கா அமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. (113)

# கணேசமூர்த்தியின் கொலைக்கு வங்கியாளர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்—

காங்கேசன்துறை மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை யாழ்மாவட்ட வங்கியாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நேற்றுக்காலை தனது வீட்டிலிருந்து கடமைக்காக புறப்பட்டுச் செல்லும் வழியில் இனந்தெரியாதோரால் சுட்டுப்படு கொலைசெய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான செயல்கள் வங்கியாளர்களையும், பொதுமக்களையும் பெரிதும் பாதித்து நிர்வாகச் சீர்குலைவுகளை ஏற்படுத்த வழிவகுக்கும்.

இதற்கு முன்பும் இலங்கை வங்கி, திருகோணமலைக் கிளையின் அதிகாரியாகிய வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் கடந்த ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி கடமையில் ஈடுபட்டிருந்த போது சுட்டுப்படுகொல்லை செய்யப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே இப்படியான வன்செயலுக்கு காரணமானவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதுடன்- இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# படையினரை வெளியேற்றாவிடின் அரசுக்கு எதிராகப் போராடுவோம்!

## தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

வடமராட்சி—

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றிலிருந்து படையினர் வெளியேறி மாணவர்களின் சுதந்திரமான கற்றலுக்கு உதவ வேண்டும் என்றும் - அதனை பொருட்படுத்தாது அரசு செயற்படுமானால் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப் போவதாக யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இராணுவத்தால் - கல்லூரியை தமது அச்சுறுத்தலின் மூலம் மூடிவிடுவதற்கு படைத்தரப்பில் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

கடந்தவாரம் ஹாட்லிக் கல்லூரி சிரேஷ்ட மாணவ முதல்வன் படையினரால் கடத்தப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் கல்லூரிக்கு வியாழக்கிழமை சென்ற படையினர் பாடசாலையை மூடிமாறு மிரட்டியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கல்லூரிக்கு சென்ற படையினர் - அதிபரை பாடசாலையை மூடிவிடும்படி அச்சுறுத்தியதோடு அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். நேற்று மாணவர்கள் சென்றுவருகின்ற பாதையானது படையினரால் முட்கம்பிகள் போடப்பட்டு மறிக்கப்பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் ஏனைய பாடசாலைகளுக்கு படையினர் பாரிய அச்சுறுத்தலை விடுத்துள்ளனர். படையினரின் இந்த செயற்பாட்டை அராஜகச் செயற்பாடாகவே கருதுகிறோம்.

காலம் காலமாக தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டிருக்கும் கல்வி ரீதியான ஒடுக்கு முறைகள் தலை விரித்தாடும் குடாநாட்டில் பாடசாலைகள் எல்லாம் துப்பாக்கி முனைகள் எட்டிப்பார்க்கின்ற சிறைக்கூறுகளாக இருக்கின்ற இந்த வேளையில் மாணவர்கள் தமது உரிமைக்காக, சுதந்திரமாகக் கற்பதற்காக, சுதந்திரமாக நடமாடுவதற்காக ஏங்கித் தவிக்கின்றார்கள். தமது எதிர்காலம் பற்றி எண்ணி வருத்தமடைகின்றனர்.

இந்த நிலையில் மேற்படி சம்பவம் மாணவர்களை மேலும் ஆத்திர மூட்டுவதாய் அமைந்துள்ளது.

மேற்படி சம்பவத்தால் மாணவர்கள் வீதியில் இறங்கி போராட முயற்சிக்கின்றனர். இதனைப் படைத்தரப்பு சரியாக விளங்கிக்கொண்டு ஹாட்லிக் கல்லூரி சுதந்திரமாக இயங்குவதற்கு வழி[illegible] வேண்டும்.

ஏனைய பாடசாலைகளை அச்சுறுத்தியுள்ள இராணுவம் பாடசாலைச் சூழலைவிட்டு வேறிடங்களுக்கு நகருதல் வேண்டும்.

இந்த அவசர வேண்டுகோளை அரசுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் விடுக்கின்றோம். எமது இந்தக் கோரிக்கைகளை அரசு மிக விரைவாகப் பரிசீலனையில் எடுக்கத் தவறுமானால் - அரசை எதிர்த்து போராட்டங்களை எதிர்வரும் நாட்களில் மேற்கொள்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுப்பிரமணிய முன்பள்ளி விளையாட்டு விழா

உடுவில்—

கந்தரோடை சுப்பிரமணிய முன்பள்ளி விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் -சுன்னாகம் வர்த்தக வங்கி முகாமையாளர் இ.குலேந்திரன் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி சி. துரைசிங்கம், வைத்திய கலாநிதி க.செல்வநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வுள்ளனர்.

வலிகாமம் வலயத்தில் கடந்த டிசம்பர் மாதம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் அதிசிறப்பு பெறுபேறு பெற்ற தமிழ் கந்தையா வித்தியாலய மாணவி க.பிரதீபாவைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (101)

## தொண்டை அடைப்பான் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்—

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடும் வரட்சி நிலவுவதால் இந்தப் பருவத்தில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த்தாக்கம் ஏற்பட்டு மாடுகள் இறந்துபோகும் அபாயம் காணப்படுவதால் கிராமங்கள்தோறும் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் வைத்து தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

மாடுகளை வளர்ப்போர் மற்றும் மாட்டுப்பண்ணை வைத்திருப்பவர்கள் மாடுகளுக்கு தவறாது தடுப்பூசி மருந் துகளை ஏற்றிக் கொள்ளுமாறு கோப்பாய் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

## திருநாள் திருப்பலி

நெடுந்தீவு—

நெடுந்தீவு மேற்கு லவுறேன்சியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இந்தத் திருநாள் திருப்பலி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை நற்கருணை எழுத் தேற்றம் நடைபெறுவதுடன், மறுநாள் காலை திருநாள் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, புனிதரான லவுறேன்சியார் வேதபோதனைக்கு சென்றபோது அவரை பகல் 12 மணிக்கு கட்டிலுடன் வைத்து எரித்து விட்டதாகவும், அதன் காரணமாக வேத சாட்சியாக ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 10 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிலத்தை தோண்டும் போது கரித்துண்டுகள் காணப்படுகின்ற அதிசய நிகழ்வும் நடைபெறுகின்றமை இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

# மத்தியஸ்தர் சபைக்கான மக்கள் அறிமுக விழா!

உடுவில்—

வலிதெற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மத்தியஸ்தர் சபைக்கான மக்கள் அறிமுகவிழாவும் சபை பற்றிய சொற்பாட்டு விளக்கமும் தற்பொழுது பிரதேச செயலக பாடசாலைகள் பொது நூலகங்கள் போன்ற இடங்களில் பரவலாக நடைபெற்று வருகின்றது.

இந்த அறிமுக கலந்துரையாடலில் மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் கிராமசேவையாளர்கள் பாடசாலை அதிபர்கள் மாணர்கள் பொது மக்கள் என பலரும் பங்குபற்றி தமது சந்தேகங்களையும் சபையுடன் அணுகும் முறைபற்றியும் கேட்டு தெளிவை ஏற்படுத்துகின்றனர்.

மயிலணி சைவ மகா வித்தியாலயம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை ஏழாலை மகாவித்தியாலயம் இணுவில் பொது நூலகம் ஆகிய இடங்களில் அறிமுக கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் சபையின் தவிசாளர் சு.தம்பித்துரை அ.தற்பரானந்தன் ஆகியோர் மக்களின் கேள்விகளுக்கு தகுந்த விளக்கங்களை அளித்துள்ளனர். (101)

# தொண்டர் ஆசிரியர்கள் திங்கள் முதல் மறியல்

## யாழ்.தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்—

மாகாணக் கல்வியமைச்சால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றியும்- இதுவரை தமக்கு நியமனம் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மாகாணக்கல்வி அமைச்சின் நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றி இதுவரை தமக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்றும்-

ஏனைய மாவட்டங்களில் தொண்டராசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறுவதால் தமக்கும் நேர்முகப்பரீட்சை நடத்தி நியமனத்தை வழங்க கல்வி அமைச்சு உறுதிமொழி தரும்வரை தமது போராட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறும் என்று யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

# 56வருடங்களாக திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம்—

தென்மராட்சி - மந்துவில் பகுதியில் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருப்பதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மந்துவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் அடங்கியுள்ள பிரதான வீதி ஒன்று கடந்த 56 வருடங்களாக புனரமைக்கப்படாமல் குன்றும், குழியுமாக காணப்படுகிறது.

இந்த வீதி 1950 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வே. குமாரசுவாமியின் காலப்பகுதியில் அமைக்கப்பட்டது. அதன் பின்னர். எந்தக்காலத்திலும் இது புனரமைப்புச் செய்யப்படவில்லை.

அத்துடன் கிராமத்துக்கு மின்சாரம், குடிநீர் வசதி போன்றவற் றைச் செய்துதருமாறும் இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காலபோக நெற்செய்கைக்கு நல்லின நெல் விநியோகம்

யாழ்ப்பாணம்—

எதிர்வரும் காலபோக நெற்செய்கையின் பொருட்டு குடாநாட்டு விவசாயிகளுக்கு நல்ல இன நெல் விதைகளை பெற்றுக்கொடுப்பதற்கு யாழ். கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

நல்ல இன விதைகளை குடாநாட்டு விவசாயிகள் தத்தமது பிரிவு விவசாய சம்மேளனங்கள் ஊடாக கமநல சேவைகள் கேந்திர நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமென யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விதை நெல்லை பெறுவதற்கு விவசாயிகள் புசல் ஒன்றுக்கு 300 ரூபா செலுத்தி முற்பதிவு செய்தல் வேண்டும்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு வவுனியா உற்பத்திப் பண்ணையிலிருந்து நல்லின விதைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை மலிவு விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கவென சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட லான்ட் மாஸ்டர்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தத்தமது கமநல சேவைகள் கேந்திர நிலையத்தில் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். ஒரு லான்ட்மாஸ்டர் ஒருலட்சத்து 25000 ரூபா பெறுமதியானதாகவும், தவணைக் கட்டணத்திலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இந்த வருடத்திற்கான காலபோக நெற்செய்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி லயன்ஸ் கழக பதவியேற்பு நிகழ்வு!

வடமராட்சி—

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய ஆண்டுக்கான பதவியேற்பு நிகழ்வு அண்மையில்வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எம்.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தப்பதவியேற்பு வைபவத்தில் லயன்ஸ் கழக ஆளுநர் அலுவலக பிரதிச் செயலாளர் லயன் டொக்டர் வி. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற இலங்கை வங்கி வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியமும் கலந்துகொண்டனர்.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் இந்த ஆண்டுக்கான புதிய தலைவராக லயன் டாக்டர் எம்.தங்கராசா, செயலாளராக லயன்பொறியியலாளர் எஸ்.தவச்செல்வம், பொருளாளராக லயன் எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் பதவியேற்றுக்கொண்டனர்.

## இளைஞனிடம் பணம் பறிப்பு

சண்டிலிப்பாய்—

சண்டிலிப்பாய் பகுதியில் வீதியில் சென்ற இளைஞர்களை வழிமறித்த மோட்டார் சைக்கிளில் ரோந்து படையினர் அவர்களை சோதனையிட்டபின் - அவர்களிடமிருந்த பணத்தைப் பறித்ததாக தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதலின்போது இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளில் ரோந்து படையினரும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது வீதியால் சென்றவர்களுடைய அடையாள அட்டைகளை பரிசோதித்துவிட்டு- அவர்களிடமிருந்து மூவாயிரம் ரூபா பணத்தை பறித்துள்ளனர்.

இதேவேளை பண்டத்தரிப்பு- சித்தங்கேணி- சங்கானை -வட்டுக்கோட்டை பகுதிகளிலும் மோட்டார் சைக்கிளில் சென்ற படையினர் வீதியில் சென்றோரை திடீர்திடீரென மறித்து வீதிச் சோதனையில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது. (43)

# மாவிலாறு அணையைத் திறந்தால் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படும்

## தென்னிந்தியாவுக்கான இலங்கைத் துணைத்தூதுவர்

சென்னை —

திருகோணமலைப் பகுதியில் உள்ள மாவிலாறு அணையை விடுதலைப் புலிகள் திறந்து விட்டால், அந்தப் பகுதியில் ராணுவத் தாக்குதலை இலங்கை அரசு நிறுத்துமென தென்னிந்தியாவுக்கான இலங்கைத் துணைத் தூதுவர் பி.எம்.ஃ.ம்ஸா தெரிவித்தார்.

துணைத் தூதுவர் பொறுப்பை ஏற்ற பின்னர் முதல் முறையாக தமிழக நிருபர்களை கடந்த வியாழக்கிழமை அவர் சந்தித்தார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

திருகோணமலை மாவட்டம் மாவிலாறு அணை நீர் அந்தப் பகுதியிலுள்ள 15 ஆயிரம் குடும்பங்களின் குடிநீர் தேவையையும், 13 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தின் பாசனத் தேவையையும் பூர்த்தி செய்கிறது.

மாவிலாறு அணையை விடுதலைப் புலிகள் கடந்த மாதம் 21 ஆம்திகதி மூடிவிட்டனர். இதனால் அந்தப் பகுதியில் நீர் வரத்து பாதிக்கப்பட்டதுடன், நிலத்தடி நீர் குறைந்து சுகாதாரப் பிரச்சினையும் எழுந்துள்ளது.

அணையைத் திறந்துவிட வேண்டும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலமாக இலங்கை அரசு கேட்டுக் கொண்டது. இவ்வாறு நீரைத் தடுப்பது சர்வதேச நிபந்தனைகள், சட்டங்களின் கீழ் விரோதமானது.

புலிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியது இலங்கை அரசின் கடமை. எனவே 5 நாட்கள் காத்திருந்து, அணையை மூடிய விடுதலைப் புலிகள்மீது இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொண்டது.

இப்போதும் அணையைத் திறப்பதாகப் புலிகள் அறிவித்தால் உடனடியாக இராணுவ தாக்குதல் நிறுத்தப்படும்.

இலங்கையில் அமைதித் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியுடன் இருக்கிறார். அவர் பல காலமாக மனித உரிமைகளுக்காகப் பாடுபட்டதை அவரது அரசியல் வரலாறு தெளிவுபடுத்தும்.

விடுதலைப் புலிகளுக்கு அரசின் மீது நம்பிக்கை ஏற்படும் வகையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் தான் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டருக்குக் கொழும்பில் பாதுகாப்பாக மருத்துவ சிகிச்சை அளிக்க அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது.

கடந்த ஜூலை 11 ஆம் திகதி நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கவும், இந்தியாவில் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் போல் வழங்கவும் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளை ஈடுபடுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்துக்கு அகதிகள் வருகை அதிகரிப்பது கவலை தருகிறது. திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் இருக்கும் அகதிகளுக்கு உள்நாட்டிலேயே புகலிடம் தரப்படுகிறது. புலிகளின் மிரட்டலுக்கு அஞ்சியும், சிறுவர்களைக் கடத்திப் போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்துவதாலும் அவர்கள் தமிழகத்துக்கு அகதிகளாக வருகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## குலதுங்க கொலைகுறித்து மக்களிடம் வாக்குமூலங்கள்



கொழும்பு —

லெப்.ஜெனரல் பரமி குலதுங்க கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழு பொதுமக்களிடம் வாக்கு மூலங்களைப் பெற தீர்மானித்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக தகவல்களைத் தரவிரும்புவோர் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகர்த்த மண்டபத்திலுள்ள அலுவலகத்துக்குச் சென்று தகவல்களை வழங்க முடியும். ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழு ஓய்வு பெற்ற நீதிபதி ஜீ.டபிள்யூ.எதிரிசூரிய தலைமையில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

## வன்முறையை நிறுத்தி பேச்சுக்கு திரும்புங்கள்

### ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள்

கொழும்பு —

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் வன்முறைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டுவந்து பேச்சுவார்த்தைக்குத் திரும்புமாறு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை ஆணையாளர் வெனிற்றா பெரேரோ வோற்னர் தெரிவிக்கையில் - மாவிலாறை மூடியதை விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

படை நடவடிக்கைகள் மூலம் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணமுடியாது. சகல தரப்பினரும் பொறுமையைப் பேணி அமைதி வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவே இன்றைய நெருக்கடிக்கு காரணம்

### பிரதியமைச்சர் டிலான் பெரேரா

கொழும்பு —

மாவிலாறு அணைக்கட்டு விவகாரத்தை புலிகளுடன் பேசித் தீர்த்திருக்கலாம். ஆனால் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற அடிப்படைவாத



கட்சிகளின் சுய அரசியல் லாபம் தேடும் நடவடிக்கையால் இன்று இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளது. சேருவில விகாரையின் தேரர் கூட இதனை உறுதிப்படுத்தியிருந்தார் என்று அரசியல் அமைப்பு விவகார தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நீதிமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாவில் அணைக்கட்டு பிரச்சினை இன்று பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.பல உயிர்களைக் குடித்து விட்டது.

மாவிலாறு அணைக்கட்டைப் புலிகள் மூடியமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். இருப்பினும் இந்த விடயத்தை பேசித் தீர்த்திருக்கலாம். ஆனால் தென்னிலங்கையின் அடிப்படைவாதக் கட்சிகளின் செயற்பாட்டால் அணைக்கட்டு விவகாரம் ஆயுத நடவடிக்கையாக மாறியுள்ளது எனத் தெரிவித்தார்.

## காயமடைந்த 14 படையினர் கந்தளாய் வைத்தியசாலையில்

திருகோணமலை —

திருகோணமலை - மூதூரில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் உக்கிர மோதலில் காயமடையும் பொதுமக்களுக்கும், படையினருக்கும் சிகிச்சை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கந்தளாய் ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

மூதூரில் தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தினரில் 14 பேரும் பொதுமக்கள் இருவரும் நேற்றுமுன்தினம் கடற்படையால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் குருநாகல், அநுராதபுரம், தம்புள்ள வைத்திசாலைகளுக்கு இடமாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் கந்தளாய் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து, வைத்தியசாலைகளை சூழவுள்ள பகுதியின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொலிஸார், இராணுவத்தினரின் விடுமுறைகள் அனைத்தும் ரத்து

கொழும்பு —

சகல பொலிஸ் மற்றும் இராணுவத்தினரதும் விடுமுறைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த விடுமுறைகள் அனைத்தும் மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

இது போன்று இராணுவ தலைமைச் செயலகமும் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மூதூர் பகுதியில் இடம் பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களை அடுத்து வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனையடுத்து கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சகல பிரதேசங்களுக்குமான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.



இந்தப் பிரதேசங்களில் பொது மக்களின் வாகனங்கள், சந்தேகத்துக்கிடமான இளைஞர், யுவதிகள் கடுமையான முறையில் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

பிரதான வீதிகள் எங்கும் முக்கியமான இடங்களில் விசேட வீதிச் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளதோடு, பொலிஸ் மற்றும் இராணுவ காவலரண்களும் பலப்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரும், பொலிஸாரும் கூட்டாக இணைந்து வீதிச் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதால், மக்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வெளியிடங்களுக்குச் செல்லத் தயக்கம் காட்டி வருகின்றனர்.

## அடுத்தாண்டு ஜூலை மாதத்துக்கு முன்னர் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது !

### போக்குவரத்து அமைச்சர் பௌஸி தெரிவிப்பு

கொழும்பு —

டீசல் விலையேற்றத்தால் அதிகரித்திருக்கும் செலவுகளுக்கு ஏற்ப எரிபொருள் நிவாரணத்தை வழங்க முடியாவிடில் ஒரு வாரத்துக்குள் பஸ் கட்டணங்களை 10 சத வீதத்தால் அதிகரிக்க வேண்டுமென தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனத்தின் தலைவர் ஸ்டான்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த முறை 3 ரூபாவாலும், இந்த முறை 3 ரூபாவாலும் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறுந்தூரப் பயணங்களை மேற்கொள்ளும் பஸ்களுக்கு 18ஆயிரம் ரூபாவும், நெடுந்தூர பயணங்களை மேற்கொள்ளும் பஸ்களுக்கு மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவும் மேலதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.


எனினும், டீசல் விலையேற்றத்தால் ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து இதுவரை எந்தவிதத் தீர்மானங்களையும் எடுக்கவில்லையென தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். இதேவேளை, டீசல் விலை அதிகரித்தாலும் பஸ் கட்டணங்களை உயர்த்த இடமளிக்கப் போவதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.



அடுத்தாண்டு ஜூலை மாதத்துக்கு முன்னர் பஸ் கட்டணங்களில் அதிகரிப்பை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கைக்கு இராணுவ உதவிகளை இந்திய அரசாங்கம் வழங்கக் கூடாது

## மன்மோகன்சிங்கிடம் ம.தி.மு.க. முறையீடு



புதுடெல்கி —

இலங்கையில் போர் மூளும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளதால், அந்தநாட்டு இராணுவத்துக்கு எந்தவொரு உத வியையும் இந்தியா வழங்கக் கூடாது என்று வலியுறுத்தி ம.தி.மு.க. தரப் பில் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்கியில் நேற்று முன்தினம் ம.தி.மு.க. எம்.பிக்கள் எல்.கணே சன், பொள்ளாச்சி கிருஷ்ணன், சிப் பிப்பாறை ரவிச்சந்திரன் ஆகியோர் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந் தித்தனர். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் நடை பெற்ற இந்தச் சந்திப்பின்போது,

இலங்கை இராணுவத்துக்கு எந்தவொரு உதவிகளையும் இந் தியா வழங்கக்கூடாது என்று வலியு றுத்தினர். மேலும் ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோவின் கோரிக்கைக் கடிதத்தையும் அவர்கள் அளித்தனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அந்தநாட்டு இராணுவத்தின் முப்படைகளும் களம் இறக்கிவிடப் பட்டு, மூர்க்கத்தனமான தாக்குதல் களை நடத்தி வருகின்றன. இந்தச் சூழலில், தமிழகத்தில் உள்ள கோயம் புத்தூரில் இலங்கைப் பொலிஸா ருக்கு மத்திய றிசேவ் பொலிஸ் படை யினர் பயிற்சி அளித்து வருவதாக வெளிவந்துள்ள செய்து அதிர்ச்சியை அளிக்கிறது.

இந்தப் பயிற்சியை உடனடியாக ரத்துச் செய்துவிட்டு இலங்கைப் பொலிஸாரை அந்தநாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.

சர்வதேச ஊடகவியலாளர்களி லிருந்து எனக்குக் கிடைத்த தகவல் களின்படி, இலங்கைக் கடற்படை யைச் சேர்ந்த 854 வீரர்களுடன் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த கப்பல் ஒன்று, தமிழர்கள் பகுதியின் மீது தீவிரத் தாக்குதல் நடத்த அனுப் பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் தங்களது கடற் படைக்கு உதவிகள் செய்யும்படி இந் தியாவிடம் - இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார்.



இலங்கைத் தமிழர்களுக்கு எதி ராக அமைந்துவிடும் இத்தகைய உத விகளை ஒருவேளை இந்தியா அளிக்கு மானால் அது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகிவிடும். தமிழர் களுக்கு எதிரான தாக்குதல்களுக்குத் துணை போகும் எத்தகைய உதவி களையும் இந்தியா அளிக்கக் கூடாது என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இலங்கை பொலிஸாருக்கு பயிற்சி உயர் அதிகாரிகள் குழு ஆராய்வு

கோவை —

இலங்கைப் பொலிஸாருக்கு கோவை சி.ஆர்.பி.எப். முகாமில் பயிற்சி அளிப்பதை ஆய்வு செய்ய சி.ஆர்.பி.எப் உயர் அதிகாரிகள் புதுடெல்கியில் இருந்து நேற்று முன் தினம் கோவைவந்தனர்.

இலங்கைப் பொலிஸாருக்கு கோவை அருகே உள்ள குருடம் பாளையம் சி.ஆர்.பி.எப். முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக தற்போது 44 பேரு க்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொடர்ந்து 150 இற்கும் மேற்பட்ட வர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

இலங்கையில் போர் மூண்டுள்ள நிலையில் இங்கு பயிற்சி அளிப்பது தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக உள்ளது என ம.தி. மு.க எம்.எல்.ஏ கண்ணப்பன் சட்ட சபையில் கூறினார்.

இதையடுத்து கோவை சி.ஆர். பி.எப் பயிற்சிக் கல்லூரி முதல்வர் ஜோர்ஜ் பிரான்சிஸ் - இலங்கை பொலி ஸாருக்கு ஆயுதப் பயிற்சியோ, துப் பாக்கி சுடும் பயிற்சியோ வழங்கப்பட வில்லை. மக்கள் கூட்டத்தைச் சமா ளிப்பது தொடர்பான சாதாரண பயி ற்சி மட்டும் அளிக்கப்படுகிறது என்று கூறினார்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் நண்பகல் டெல்கியிலிருந்து உயர் அதிகாரிகள் குருடம்பாளையம் சி.ஆர்.பி.எப் முகாமில் இலங்கை பொலிஸாருக்கு அளிக்கப்படும் பயி ற்சி குறித்து ஆராய கோவை வந் தனர். இவர்கள் இலங்கை பொலிஸா ருக்கு அளிக்கப்படும் பயிற்சிகள், அவை தொடர்ந்து கொடுக்கப்படு வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

## பேச்சுக்களைத் தொடங்குமாறு அரசிடம் இந்தியா கோரிக்கை!

புதுடெல்கி —

இலங்கையில் வன்முறை அதிகரிக்காமல் அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா கேட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்ற மேலவையில் இந்திய வெளியுறவு இணை அமைச் சர் ரி.அகமது இந்தச்செய்தியை வெளியிட்டார்.

இலங்கையின் இறையாண்மை, ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு இந் திய ஆதரவு தொடரும். போர்நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்து வதற் கும், சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச்செல்வதற்கும் அரசியல் ரீதியான நடவடிக்கையை எடுக்குமாறு இந்தியா - இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலையில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு காரணம் ஜனாதிபதியே!

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு



திருகோணமலை —

திருகோணமலையில் இராணு வத்துக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு ஜனாதிபதியே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள் ளது.

அனைத்துக்கட்சிகளினதும் ஆதரவைப் பெற்றுக்கொண்டு ரோக்கியோ பிரகடனத்தின் அடிப்ப டையில் ஜனாதிபதி அரசியல் தீர் வொன்றைக்காண முன்வர வேண் டும் என்று கட்சியின் பொதுச் செய லாளர் என்.கே.கே.வேரகொட தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது -

ஐக்கிய தேசியக்கட்சியின் மீது நம்பிக்கை வைத்தே மக்கள் நாடா ளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தனர். எனவே, தெரிவு செய் யப்பட்ட உறுப்பினர்கள் மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க வேண் டும். தமது கட்சியின் கொள்கை பொருத்தமாக இல்லாவிடின் உறுப் பினர்கள் நாடாளுமன்றத்திலிருந்து தமது பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும்.

அரசை கடுமையாக விமர்சித்து விட்டு தற்போது அரசாங்கத்துடன் இணைந்துகொள்வது எந்த வகை யில் பொருத்தம்?

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ள அனைத்து உறுப்பி னர்களுக்கு எதிராகவும் கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும். மக் களின் ஆணையை உடைத்தெறிந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப்போடுவதன் மூலம் எமது கட்சியை சிதறடிக்க முடியாது. வெருகலாறுப் பகுதியில் அரசாங்கத் தால் புலிகளை தோற்கடிக்க முடியா மல் போயுள்ளது. இதுதான் மகிந்த சிந்தனையாகும்.

இலங்கையை தோல்வியடைந்த நாடாக உருவாக்கிக் கொண்டிருக் கும் அரசாங்கத்துக்கு எதிராக போரா ட்டங்களை நாம் மேற்கொள்வோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முதல்வர் கருணாநிதி முயல வேண்டும்

### மதுரை ஆதீனம் தெரிவிப்பு

திருச்சி —

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முதல்வர் கருணாநிதி முயற்சி செய்ய வேண்டும். அவரால் அது முடியும் என மதுரை ஆதீன சீர் வளர்சீர் அருணகிரிநாத ஞானசம் பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

திருச்சியில் கடந்த வியாழக்கி ழமை அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது-

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நோர்வே நாட்டுத் தூதுவர், தமிழக முதல்வர், பிரதமர் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப் பின் தலைவர் பிரபாகரன் ஆகியோர் கொண்ட ஐவர் குழு பேசி முடிவு எடுக்க வேண்டும் எனத் தெரிவித் தார்.

## கொழும்பில் கைதாகும் தமிழர்களை சிறைச்சாலைக்கு அனுப்பக்கூடாது

### மகேஸ்வரன் எம்.பி.கோரிக்கை



கொழும்பு —

கொழும்பிலும், சுற்றுப்புறங்களி லும் கைது செய்யப்படும் தமிழ் இளை ஞர், யுவதிகளை சிறைச்சாலைக ளுக்கு அனுப்பாது பொலிஸ் நிலை யத்தில் வைத்தே விசாரணை செய்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதி யில் நேற்று முன்தினம் பிரதமரும், பாதுகாப்பு பிரதியமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற பாதுகாப் பமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்தக் கோரிக் கையை அவர் முன்வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் கூட்டுப்படைக ளின் தளபதி டொனால்ட் பெரேரா, முப் படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் உட்பட பலரும் கலந்து கொண் டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த நாடாளு மன்ற உறுப்பினர் மகேஸ்வரன் -

யாழ்.குடாநாட்டில் காணாமல் போனோர் தொடர்பாக பாதுகாப்ப மைச்சு பதில் கூற வேண்டும். குடா நாட்டில் எரிபொருள் விநியோகத்துக் குப் படையினர் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இந்த நிலை மாற வேண்டும்.

திருமலை மாவிலாறு பிரச்சினைக் குக் காரணம் அரசாங்கம் பொருளா தாரத் தடைவிதித்தமையேயாகும். எனவே பொருளாதார தடையை நீக்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர் வைக் காண முன்வர வேண்டும். கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் கைது செய்யப்படுபவர்களை 24 மணி நேரத்தில் பொலிஸ் நிலையத் தில் வைத்தே விசாரித்து விடுவிக்க வேண்டும். சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்களை அடைத்துச் சித்திரவதை செய்யக் கூடாது என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறினார்.

இதேவேளை மாவிலாறு அணைக் கட்டு விவகாரம் தொடர் பாக இந்தக் குழுக் கூட்டத்தில் ஐ.தே.கவின் எம்.பி.ஜோன் அமரதுங்க கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த கூட்டுப்படைகளின் தளபதி டொனா ல்ட் பெரேரா - மாவிலாறு அணைக் கட்டு நோக்கி நிதானமாகப் படை யினர் முன்னேறி வருகின்றனர். படை நடவடிக்கை தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சந்திரிகா - ரணில் விரைவில் சந்திப்பு!

கொழும்பு —


ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் - முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான சந்திப்பு விரைவில் நடத்தப்படவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.


இந்தச் சந்திப்பை லண்டன் நகரில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. தற்போது ஓய்வெடுப்பதற்காக ஆர்ஜென்ரீனா சென்றுள்ள சந்திரிகா - அங்கிருந்து லண்டனுக்கு வந்தவுடனேயே ரணில் விக்கிரமசிங்க இலங்கை யிலிருந்து லண்டன் செல்லத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா இந்த மாதம் முதல் வாரத்தில் இலங்கை திரும்பத் தீர்மானித்தி ருந்தார். எனினும் ஜே.வி.பி, அரசுடன் இணைந்து கொள்வதற்கான சாத்தி யங்கள் உள்ளதனால் அவர் இலங்கைக்கான பயணத்தை ரத்துச் செய்து விட்டு ஆர்ஜென்ரீனா செல்லத் தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2006

ஆசிரியர் :- த.அம்பிகைபாகன்





**பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சிரமதானத்தில் பங்கு பற்றிய மாணவர்களின் விபரம் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.**

| மாணவர்கள் | தரம் 11 | தரம் 10 | தரம் 9 | தரம் 8 |
|---|---|---|---|---|
| ஆண் | 35 | 55 | 45 | 50 |
| பெண் | 40 | 25 | 30 | 65 |

**இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி நிரல் வரைபொன்று வரைக. வரைபு வரைவதற்கு கீழுள்ள கட்டங்களில் ஒரு கட்டமானது 10 மாணவர்களைக் குறிக்குமாறும் அத்துடன் பெண்களுக்கு (X) அடையாளமும் ஆண்களுக்கு (✓) அடையாளமும் இடுக.**




1. சிரமதானத்தில் நான்கு வகுப்புகளிலும் ஈடுபட்ட பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?..........................................
2. சிரமதானத்தில் மொத்தமாக ஈடுபட்ட ஆண்பிள்ளைகள் எத்தனை பேர்?
..........................................
3. தரம் 6 இல் ஆண்களினதும் பெண்களினதும் எண்ணிக்கை சமனாக இருப்பதற்குப் பெண்களில் இருந்து எத்தனைபேர் சிரமதானம் செய்வதிலிருந்து நீங்க வேண்டும்? ..........................................
4. பெண்களின் எண்ணிக்கையிலும் இருமடங்கிலும் அதிகமான ஆண்கள் எவ்வகுப்பில் சிரமதானம் செய்கின்றனர்? ..........................................
5. இந்தச் சிரமதானத்தில் சமனான பிள்ளைகள் பங்கெடுத்துக் கொண்ட வகுப்புகள் யாவை?..........................................

**பொருத்தமற்ற படத்தின் கீழ் கோடிடுக.**

6.

1 2 3 4 5

7.

1 2 3 4 5

8.

1 2 3 4 5


9.

1 2 3 4 5

10.

1 2 3 4 5

**கீழே இரண்டு ஒரேயளவான சாடிகள் படத்தில் காட்டப்பட்டவாறு அமைக்கப்பட்டு இரண்டுக்கும் ஒரேயளவான நீர் ஊற்றப்பட்டுள்ளது.**




11. ஒரு சிலநாட்களின் பின் அவதானிக்கும் போது எந்தச் சாடியில் உள்ள விதை முளைத்திருக்கும்? ..........................................
12. அவ்வாறு முளைக்கக் காரணம்யாது?..........................................

**கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் அமைக்க.**

13. உள்ளேன், உங்கள், ஆவலாக, அனைவரினதும், நலமறிய
..........................................

14. அறையின், அமரச், தாயாரை, செய்தான், மூலையில், ஒரு
..........................................

15. வழக்கம்போல, சென்றது, ஒருநாள், உணவு, அது, தேடிச்
..........................................

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

16. புற்றில் வாழும் பிராணிகள் இரண்டு தருக?
1. .................... 2. ....................
17. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகள் இரண்டு தருக?
1. .................... 2. ....................
18. வித்துக்கள் பரவலடையும் முறைகள் இரண்டு எழுதுக?
1. .................... 2. ....................
19. ஒளி முதல்கள் இரண்டு எழுதுக?
1. .................... 2. ....................
20. பழப்பாகு தயாரிக்கப் பயன்படும் பழங்கள் இரண்டு எழுதுக?
1. .................... 2. ....................

**பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

21. நீண்ட தூரம் ஓடியதால் அவன் (களைத்து, கழைத்து, கலைத்து) நிலத்தில் விழுந்தான்.
22. நேற்று மாலை தொலைக்காட்சியில் ஒரு நாடகம் (ஒளிபரப்பு, ஒலிபரப்பு, ஒழிபரப்பு) செய்யப்பட்டது.
23. (வைக்கோல், வைக்கோள், வைக்கல்) பட்டடைக்கு அருகில் நாய் படுத்திருந்தது.

**கீழே தரப்பட்ட படத்துக்குப் பொருத்தமான வினைச்சொல்லை அருகிலே தரப்பட்டுள்ள சொங்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

24.

1. பாய்கின்றான்.
2. வீதியைக் கடக்கிறான்.
3. விளையாடுகின்றான.

25.

1. தூங்குகின்றார்கள்.
2. கதைக்கின்றார்கள்.
3. நடனமாடுகிறார்கள்.

26

1. மீன்பிடிக்கிறான்
2. வலிக்கிறான்
3. சிரிக்கிறான்

27.

1. தூங்குகின்றான்.
2. பார்க்கின்றான்
3. இருக்கின்றான்.

28.

1. வரைகின்றான்.
2. கூட்டுகின்றான்.
3. விளையாடுகின்றான்.

**கீழே தரப்பட்ட தாவரங்களை அட்டவணையில் கேட்கப்பட்டவாறு தரம் பிரிக்குக.**

**(பலா, தென்னை , நெல், லீக்ஸ்,வெங்காயம், குப்பைமேனி, வாழை)**

29.

| ஆணிவேர் | நாருரு வேர் |
|---|---|
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |
| ---------------- | ---------------- |

30. அஜித்குமார் ஒரு முட்டை ரூபா 4.00 வீதம் 25 முட்டைகள் வாங்கினான். அதில் ஒரு முட்டை கீழே விழுந்து உடைந்து விட்டது. மீதி முட்டைகள் 4.50 வீதம் விற்பனை செய்வானாயின் அவனுக்கு எவ்வளவு இலாபம் கிடைக்கும்?
..........................................
31. சுற்றுலா ஒன்றுக்காக 80 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் 3 பெற்றோரும் செல்லத் தீர்மானித்ததுடன் மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 100.00 உம் ஏனையவர்கள் ஒவ்வொருவரிடமிருந்து ரூபா 150 உம் அறவிடப்பட்டது. எனின் மொத்தமாகச் சேர்ந்த தொகை எவ்வளவு?
..........................................
32. அஸ்வாக் 20 கொய்யாவும், ஹம்சத்வனி 54 கொய்யாவும், சமீராபானு 10 கொய்யாவும், கொண்டு வந்தார்கள். அவர்கள் மூவரும் கொய்யாவைத் தங்களுக்குள்ளே பங்கிட நினைத்தால் ஒவ்வொருவரும் பெறும் கொய்யாக்களின் எண்ணிக்கை யாது?
..........................................
33. கீழேயுள்ள மாம்பழத்துக்கு பொருத்தமான இன்னுமொரு மாம்பழம் எதுவெனக் கண்டுபிடித்து அதன் கீழ்க்கோடிடுக.


1 2 3 4

34. குடையின் கிழிந்த பகுதி எதுவெனக் கண்டுபிடித்து பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.


1 2 3 4

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2006

ஆசிரியர் :- த.அம்பிகைபாகன்

பகுதி - II

**பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**தலைவாரிப் பூச்சூடி உன்னை - பாடசாலைக்குப்**
**போவென்று சொன்னாள் உன் அன்னை**
**சிலை போல் ஏனங்கு நின்றாய் - நீ**
**சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்**

1) தலை என்பதற்கு ஒத்த சொல் தருக? ....................
2) சொன்னாள் என்பதை நிகழ்காலத்தில் எழுதுக? ....................
3) போவென்று என்பதைப் பிரித்தெழுதுக? ....................
4) "கண்ணீரைச் சிந்துகிறாய்" என்ற வாக்கியத்தின் எழுவாய் யாது? ....................
5) பாடசாலைக்குப் போகும்படி கூறியவர் யார்? ....................
6) "அன்னை" என்பதற்கு எதிர்ப்பால் சொல் தருக? ....................
7) "பூ" என்பதற்குரிய பன்மைச் சொல்லைத் தருக? ....................
8) அன்னை, பூ என்பவற்றின் அஃறிணைச் சொல்லை எழுதுக? ....................
9) மயூரன் புத்தகத்தைத் தொலைத்து விட்டான் இந்த வாக்கியத்தின் செயற்படுபொருள் யாது? ....................
10) தலைவாருதல் என்ற சொற்றொடரின் பொருள் யாது? ....................

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1) இரண்டாவது இரட்டை எண் யாது? ....................
2) 69901 உடன் 9 ஐக் கூட்டினால் வரும் விடை யாது? ....................
3) ஐந்தாவது முக்கோண எண் யாது? ....................
4) ஓர் எண்ணை 5 ஆல் பெருக்கி 5ஐக் கூட்ட 40 வருகிறது. அந்த எண் யாது? ....................
5) 7500 கிராமை கிலோகிராமில் தருக? ....................
6) 42 ஐ உரோம எண்ணில் தருக? ....................
7) 10000 இற்கு முன்னுள்ள எண்ணை எழுதுக? ....................
8) ஒரு வட்டத்துக்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உள்ளன? ....................
9) 9, 4, 7, 6 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக? ....................
10) (X) என்பது பெருக்கலையும் (.) என்பது பிரித்தலையும் குறிக்கும். 5(X) 6(.) 3 இன் பெறுமானத்தை எழுதுக? ....................

**பகுதி "அ" இற்குப் பொருத்தமான விடையை பகுதி "ஆ" வில் இருந்து தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 1) காடுகள் | ( ) | 1. இருபத்தேழு. |
| 2) தேனீ | ( ) | 2. ஏழு. |
| 3) தராசு | ( ) | 3. ஒட்டகம். |
| 4) பூகம்பம் | ( ) | 4. சல்யூட். |
| 5) நட்சத்திரங்கள் | ( ) | 5. சமூக உணர்வுள்ளது. |
| 6) பாலைவனக் கப்பல் | ( ) | 6. இயற்கையழகு. |
| 7) தனிநபர் உரிமை | ( ) | 7. இயற்கை. |
| 8) ஆதிமனிதன் | ( ) | 8. பேச்சு சுதந்திரம் |
| 9) செயற்கை உபகோள் | ( ) | 9. நெம்புகோல். |
| 10) கண்டங்கள் | ( ) | 10. வேட்டையாடுதல் |

**கோடிட்ட இடத்தில் மிகவும் பொருத்தமான சொல்லை வைத்து இடை வெளியைப் பூர்த்தி செய்க.**


(இடைவிடாது , இனியஓசை, கசக்கிக், குளிர்காற்று, படுத்திருந்த)


மார்கழி மாத.................... ச் சில்லென்று வீசியது. பாயிலே................ நல்லதம்பி கண்களைக்................ கொண்டு எழுந்தார். மரத்தில் ஏறியிருந்த சேவல்.................... கூவியது. குருவிகளின்.................... காற்றுடன் கலந்தது.

**பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

1) உதைபந்து ....................
2) சூரியன் ....................
3) திகதி ....................
4) மிருகம் ....................
5) தச்சுத்தொழில் ....................
6) யானை ....................

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1) 215> 110 என்பதை எழுத்தில் எழுதுக? ....................
2) தேக்கரண்டி ஒன்று கொள்ளும் திரவத்தின் கனஅளவு யாது? ....................
3) 50000+400+30+7 என்பதனால் வகைக் குறிக்கப்படும் எண்ணை எழுதுக? ....................
4) 42 cm நீளமான கயிறொன்று 7 சம துண்டுகளாக வெட்டப்பட்டது. ஒரு துண்டின் நீளம் என்ன? ....................
5) 

இந்த எண் சட்டம் காட்டும் எண் யாது? ....................
6) 1 kg செத்தல் மிளகாயின் விலை ரூபா 120 எனின் 500 g செத்தல் மிளகாயின் விலை யாது? ....................
7) நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாயின் நேற்று முன்தினம் என்ன கிழமை? ....................
8) மு.ப.7.20இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட மாலினி பி.ப.2.30இற்கு குறிப்பிட்ட இடத்தை அடைந்தாள். அவள் பிரயாணம் செய்ய எடுத்த நேரம் யாது? ....................
9) புகையிரத நிலையமொன்றில் பொருத்தப்பட்ட மணிக்கூடு 15.20 மணியைக் காட்டியது. அதனைச் சாதாரண நேரத்தில் எழுதுக? ....................
10) 
நிழற்றப்பட்ட பகுதியின் பின்னத்தை எழுதுக? ....................

**பின்வரும் வாக்கியங்களை சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

1) பூமி சூரியனைச் சுற்றி வருவதால் பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன. ( )
2) கிளித்தட்டு ஒருகிராமிய விளையாட்டு ஆகும். ( )
3) 〰〰〰 என்பது படி இரேகையாகும் ( )
4) மனிதனின் சாதாரண வெப்பநிலை 88.4° F ஆகும். ( )
5) ஈட்டி எறிதல் ஒரு மைதான நிகழ்ச்சியாகும். ( )
6) தென்னங்குருத்தில் இருந்து குருத்தோலை கிளி ஆக்க முடியாது. ( )
7) பிள்ளை ஒன்றின் பாற்பற்களின் எண்ணிக்கை இருபது ஆகும். ( )

**பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**


மழை காலத்தில் வனங்கள் தண்மைமிக்கனவாகக் காட்சியளிக்கும். அந்தக் காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்தது போலக்காட்சி கொடுக்கும். திறந்த வெளிகளில் புற். உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகள் எல்லாம் நீர் நிறைந்திருக்கும், நதிகளிலோ, குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காண முடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்த பன்றிகளோடு மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக் கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடி அசைந்து செல்வதையும் நாம் காணலாம்.


1) மழைக் காலத்தில் காடுகள் எவ்வாறு காட்சியளிக்கும்? ....................
2) கிழங்கு, இலைகள் ஆகியவற்றைத் தின்ற விலங்குகள் எப்படி இருந்தன? ....................
3) நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டுக்குள் சென்ற மிருகம் யாது? ....................
4) இங்கு இடம் பெற்றுள்ள இணைமொழி ஒன்று எழுதுக? ....................
5) மரங்கள் எவ்வாறு காட்சியளித்தது? ....................
6) களிறு என்பதன் பெண்பாற் சொல் தருக? ....................
7) தண்மை என்பதன் ஒத்தசொல் தருக? ....................
8) ஆரவாரம் என்பதால் கருதப்படுவது யாது? ....................
9) நதிகளிலோ, குளங்களிலோ விலங்குகளுக்கு நீர் குடிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? ....................
10) அஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக? ....................

**பின்வரும் படங்கள் குறிக்கும் பெயர்களைத் தருக?**

1) 
....................

2) 
....................

3) 
....................

4) 
....................

நான் ஒருநாள் கடற்கரைக்கு விளையாடுவதற்கு எனது நண்பர்களுடன் சென்றேன். அப்பொழுது மாலை நான்குமணி இருக்கும். அலையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை முதலை ஒன்று இழுத்தது.

....................

இந்தக் கதையை நான்கு சொற்களுக்குக் குறையாது பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் ஆறு வாக்கியங்களில் பூர்த்தி செய்க.

1) ....................
2) ....................
3) ....................
4) ....................

# சமாதான பேரணியில் கலந்துகொள்வதற்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம் —

விழிப்புலனற்றோரை ஒன்று திரட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ள சர்வமதப் பிரார்த்தனையிலும், சமாதானப் பேரணியிலும் பங்கு பற்றுமாறு விழிப்புலனற்றோர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக விழிப்புலனற்றோர் சங்கம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். விழிப்புலனற்றோர் சங்க தலைமையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றவர்கள் அனைவரையும் இணைத்து, வீரசிங்கம் மண்டபத்தில் சர்வமதப்பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து சமாதானப்பேரணியும் நடத்தவுள்ளோம்.

கடந்தகால யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கானோர் உடல், உளரீதியாக ஊனமுற்றிருக்கிறார்கள். அவர்களது சமூக, பொருளாதார நிலைமைகள் சிதைக்கப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து அவர்கள் மீளமுடியாது தத்தளித்துக்கொண்டு இருக்கிறார்கள். மீண்டும் ஒரு யுத்த மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கிற இந்த காலகட்டத்தில் - மீண்டும் ஒருயுத்தம் வருமாயின் அங்கவீனர்களுடைய தொகை அதிகரிக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையே ஏற்படும்.

இதைத் தவிர்க்க முடியாத நிலையும் ஏற்படும். எனவே எமது நாடு அங்கவீனர்கள் நிறைந்த நாடாக ஏற்படக்கூடாது என்ற வகையிலும், இன்று நாங்கள் நாளை எதிர் காலசந்ததி ஊனமுடையவர்களாக மாறக்கூடாது என்ற வகையிலேயே சர்வமதப்பிரார்த்தனையையும், சமாதானப்பேரணியையும் முன்னெடுக்கிறோம்.

.எனவே, சமாதான விரும்பிகள் இதில் பங்கெடுத்து ஆதரவு தரும்படி அழைக்கின்றோம். வர்த்தகப் பெருமக்களையும், கல்விமான்களையும், அன்னையர்களையும், மகளிர் அமைப்புக்களையும், சமய நிறுவனங்களையும், மனிதநேய அமைப்புக்களையும், தொண்டு நிறுவனங்களையும் எமக்கு ஆதரவு தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கி றோம்.

அத்தோடு, யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ஊனமுற்றவர்களையும் இதில் கட்டாயம் பங்கெடுக்கும்படி வேண்டி நிற்கிறோம். இன்று ஊனத்தால் நாம் படும் துன்பம் நாளைய சமூகம் அடையக்கூடாது என்பதே எமது நோக்கமாகும்.

எனவே, இதில் ஒவ்வொருவரும் பங்கு கொள்ளவேண்டியது உங்களது சமூகக் கடமை ஆகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரைதிரும்பிய மீனவர் மீது படையினர் சோதனை கெடுபிடி

யாழ்ப்பாணம் —

குருநகரில் கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை கரைக்குத் திரும்பிய வேளை இறங்குதுறைச் சோதனைச் சாவடியில் படையினர் கடுமையான சோதனைக்குட்படுத்தியதுடன் மீனவர்களை அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2 ஆம் திகதி இரவு விடுதலைப் புலிகள் பாசையூர் கடலில் அமைந்துள்ள முகத்துவாரக்கட்டைப் பகுதிக்கு வந்து போனதாகவும், அதனை அவதானித்த படையினர் காலை கரைக்குத் திரும்பிய கடற்தொழிலாளர்களைக் கடுமையான விசாரணைக்குட்படுத்தியதோடு - அவர்களைத் துருவித் துருவி சோதனைகளையும் மேற்கொண்டனர்.

இத்தகைய சோதனைகளாலும், அச்சுறுத்தல்களாலும் தொழிலாளர்கள் தமது மீன்களைக் குறித்த நேரத்தில் சந்தைப்படுத்த முடியாமல் போனதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர். (206)

# நட்புறவுடனான மக்கள் சேவையில் அரச அதிகாரிகள் ஈடுபட வேண்டும்!

## அதிகாரிகள் மத்தியில் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

பொதுமக்களுடன் சிறந்த முறையில் உறவுகளை வைத்திருக்க வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் யாழ். செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடும்போது தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் மாதாந்தம் அதிகாரிகளை சந்திக்கும் கூட்டத்திலேயே மக்களின் தேவைகள், குறைகள் மற்றும் பிரச்சினைகள் என்பவற்றை அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டும் பொழுது, அவற்றைக் காலதாமதமின்றி நிறைவேற்றிக் கொடுப்பதுடன் -

அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களிடம் மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் நட்புறவுடன் மக்கள் சேவையை வழங்குவதோடு, பொதுமக்களின் விடயங்களில் அதிக அக்கறை காட்டி, பொதுமக்களை அலைய வைக்காமல் சேவையாற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் - அரச அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட் ளது. அவற்றின் பிரதிகள் பிரதேச செயலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானம் வேண்டி மானிப்பாயில் பிரார்த்தனை

உடுவில் —

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற அவல நிலை நீங்கி வளமான சமாதான வாழ்வு மலரவேண்டுமென என இறை அருள் வேண்டி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களாலும், பெற்றோர்களாலும் நாளை காலை 10 மணியளவில் விசேட பிரார்த்தனை வழிபாடு நடத்தப்படவுள்ளது. பண்ணிசை ஆசிரியை திருமதி மலர்விழி கனகசபை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - ஆத்மீக ஆத்மஜோதி வெளியீட்டு ஆசிரியர் நா.முருகையா. வலிகாமம் இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சுந்தரர் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமயப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சீருடைகளும் வழங்கப்படுமென அதிபர் கா.கணேசதாசன் அறிவித்துள்ளார். (101)

# அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி செம்மணிப் பகுதியில் மணல் திருட்டு!

## பொதுமக்கள் மத்தியில் கடும் விசனம்

யாழ்ப்பாணம் —

நாயன்மார்கட்டு செம்மணி வயல் வெளிகளில் திருடர்களால் தினமும் சட்டவிரோதமாக மண் அகழ்வு நடைபெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

இந்த மண் அகழ்வால் மழை காலங்களில் செம்மணிக் கடல் நீர் கிராமத்துக்குள் புகுந்து விடும் அபாய நிலை ஏற்படக்கூடிய சாத்திக் கூறும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி, மணல் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி இலகுவாக தமது இந்தச் சட்ட விரோத நடவடிக்கையை தினமும் செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வயல் மண்ணை அள்ளுவது மட்டுமன்றி, வயல் சொந்தக்காரர்களின் எல்லைகளைக் காட்டி நிற்கின்ற வயல் வரம்புகளையும் உடைத்து அந்த மணலையும் ஏற்றிச் செல்வதால், உரிமையாளர்களின் வயல் எல்லைகள் தெரியாது உருமாற்றம் பெறுவதால் எதிர்காலத்தில் பல தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படவுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைக் குழுவில் ஏறக்குறைய 10 தொடக்கம் 15 பேர் வரையிலானோர் ஈடுபடுவதாகவும், நியாயம் கேட்டுச் சென்ற பொதுமக்களில் சிலர் அவர்களால் நையப்புடைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல மாதங்களாக எடுத்துரைத்த போதும் - நாயன்மார்கட்டு பாரதி மன்ற சன சமூக நிலையத்தின் ஊடாக கோப்பாய் பிரதேச செயலருக்கும், இதில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையையும் அவர்கள் இது வரை எடுக்காததால் அந்தப் பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

# பாடசாலைக்கு தண்ணீர்த்தாங்கி

யாழ்ப்பாணம் —

கோண்டாவில் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு தண்ணீர் தாங்கி அமைப்பதற்காக மகிந்த சிந்தனையின் கீழ் ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைக்கு சில வருடங்களுக்கு முன்னர் அரச சார்பற்ற நிறுவனத்தால் தண்ணீர் தாங்கி அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதால் - மாணவருக்கு சத்துணவு வழங்குவதற்கான சமயலறைக்கூடம் ஒன்றை ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் அமைத்துத் தருமாறு- பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்ட பொழுதும் அதற்கு உரிய அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்து விட்டனர் எனவும் கூறப்படுகிறது.

# கண்ணிவெடி அகற்றிய பிரதேசங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். செயலக மிதிவெடி அகற்றும் பிரிவால் கோப்பாய் பிரதேசத்தில் கடந்த 28 ஆம் திகதி கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்கள் கையளிக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் 559 நிலக்கண்ணிவெடிகளும், 22 வெடிக்காத வெடி பொருட்களும் அகற்றப்பட்டுள்ளன.

இதேவேளை ஊரெழுவை அண்டிய பகுதியில் இருந்தும் 10 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதுடன், விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

# ---நல்லூரில் இன்று---

மானிப்பாய் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 3 மணிககு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் - 'கந்த சஷ்டி விரதத்தின் மகிமை' என்னும் கருப்பொருளில் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் அ.வாசுதேவா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இதைத் தொடர்ந்து ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மற்றும் அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். (100)

# வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

நல்லூர் —

யாழ்.கல்வி வலயத்தில் யுனிசெப் அனுசரணையுடன் இயங்கிவரும் திட்டமிடல், கண்காணித்தல், மதிப்பிடுதல் பிரிவில் வலிகாமம் வலயத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமை புரிவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் . இது தொடர்பான மேலதிக விபரங்களை வலிகாமம் கல்வி வலயம், வலிகாமம் கோட்டக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் பார்வையிடலாம் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.



யுனிசெப் - றீடோ இணைந்து நடத்தும் முள்ளி, சாந்தை, சாவற்கட்டு கிராமங்களை மையமாகக் கொண்ட ஒவ்வொரு மாணவருக்குமான கல்வி விழிப்புணர்வு செயற்பாட்டில் கலந்துகொண்ட சாவற்கட்டு கிராம மட்ட நாடகக் குழுவினரையும், விழிப்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சாந்தைக் கிராம மக்களையும் படங்களில் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : அ.கிரிதீபன்
முகவரி : யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும்
பெற்றோர் ஒப்பம்

# விவசாய திணைக்கள அலுவலகம் அமைக்க

# ஒப்பந்தகாரர் வராமையால் நிதி திரும்பும் அபாயம்!

## விவசாயப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள தலைமைக் காரியாலயம் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தால் தரைமட்டமானது. அதை மீள் நிர்மாணம் மேற்கொண்டபோது சுனாமித் தாக்கத்தால் மீண்டும் கட்டடம் அழிந்துபோனது.

மீண்டும் தற்போது நிகொட் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் அமைப்பதற்கென 23 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, கட்டடம் அமைப்பதற்கான ஒப்பந்தகாரர்களுக்குக் கூறுவிலை கோரப்பட்டு, இன்றுவரை எந்த ஒப்பந்தகாரரும் கட்டடத்தை அமைப்பதற்கு முன்வராத காரணத்தால், இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் அபாயம் உள்ளது.

முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்தும் ஒப்பந்தகாரர் முன்வந்து இந்தக் கட்டடத்தை அமைக்கலாம் எனவும் விவசாயப் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸாரின் தாக்குதலில் வைத்திய அதிகாரி படுகாயம்

மன்னார் —

மன்னார் - முருங்கன் மாவட்ட வைத்தியசாலை அதிகாரியின் வாகனம்மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அதில் பயணம் செய்த மாவட்ட வைத்திய அதிகாரியும், வாகனச் சாரதியும் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில், மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் பிறேமானந் மற்றும் சாரதி ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற பின்னர் பொலிஸார் பரவலாகத் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததாகவும், அந்தவேளை பிரஸ்தாப வாகனத்தின் மீதும் சுடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

நானாட்டான் பகுதிக்கு மருத்துவ சேவை நடத்திவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. (மோ)

# நிரந்தர வீடுகள் அமைக்க அடிக்கல் நாட்டும் நிகழ்வு

வவுனியா —

வவுனியா மாவட்டத்திலுள்ள சின்னத்தம்பனை கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்டு, வீடுகளற்ற 40 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் முதற்கட்டமாக 5 வீடுகளுக்கான அடிக்கற்கள் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் வடக்கு - கிழக்கு சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்ற இந்த வீட்டுத்திட்டத்தில் - ஒவ்வொரு வீடும் 2 லட்சத்து ஐம்பதினாயிரம் பெறுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வெங்கலச்செட்டிக்குள பிரதேச செயலாளர் சிவபாலசுந்தரம், சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டத்தின் சார்பில் உதவித் திட்மிடல் பணிப்பாளர் வி.முகுந்தன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் துஸ்யந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பாக அதன் நிர்வாக உத்தியோகத்தர் இ.சத்தியமூர்த்தி, பொறியியலாளர் க.செல்வரஞ்சன், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் சார்பாக வவுனியா மாவட்ட இணைப்பாளர் திருமதி அருள்வேல்நாயகி மற்றும் கிராம சேவகர்கள், கிராம மக்களென பலரும் கலந்து கொண்டனர்.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி —

கிளிநொச்சி வர்த்தக சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 2006 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளாகத் தலைவர் இ.சரவணபவானந்தன், துணைத்தலைவர் செ.சுப்பிரமணியம், செயலாளர் சி.நவரத்தினராசா, துணைச் செயலாளர் க. சூரியமூர்த்தி, பொருளாளராக கு.இராமச்சந்திரன் மற்றும் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# புனித சூசையப்பர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு போட்டி

வட்டக்கச்சி —

வட்டக்கச்சி புனித சூசையப்பர் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா - இன்று பிற்பகல் 2 மணியளவில் வட்டக்கச்சி கட்சன் வீதி புனித சூசையப்பர் ஆலய முன்றலில் ஆசிரியர் ச.விக்ரோரியா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக அருட்திரு. லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார், வட்டக்கச்சி வைத்திய அதிகாரி வீரபத்திரபிள்ளை - சிறப்பு விருந்தினரர்களாக அருட் சகோதரி ஞா.றோகினி, கிராம அலுவலர் ஜோன் ஜெகநாதன்- கௌரவ விருந்தினராக வட்டக்கச்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் சுரேன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(09)

# சிறுபோக நெற்செய்கையில் சிற்றுண்ணிகளின் தாக்கம்!

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் "மைற்ஸ்" எனப்படும் சிற்றுண்ணியின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது நெல் இலையின் கீழ்ப்புற இலைப்பாகத்தில் இருந்து இளங்காற்றை உறிஞ்சிக் குடிப்பதால் இலை மஞ்சள் நிறமாக மாறிவருவதை அவதானிக்க முடிகிறது.

நெல் விளைச்சலை இது பாதிக்கும் என்பதால், வயலை நன்கு அவதானிக்கும்படி முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் விவசாயி களைக் கேட்டுள்ளார்.

தாக்கம் உள்ள விவசாயிகள் சல்பர் ஒரு அவுண்ஸ் இரண்டு கலன் நீரில் கலந்து விசிறல் வேண்டும். சல்பர் இல்லாதவிடத்து "நிசோரான்" ஒரு அவுண்ஸ் 4 கலன் நீரில் கலந்து விசிறலாம் எனவும், மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள விவசாயப் போதனாசிரியரை நாடும்படியும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (09)

# தொலைநோக்கி நூல் வெளியீடு!

கிளிநொச்சி —

புலிகளின் குரல் நூல் வெளியீட்டுப் பிரிவால் நா.யோகேந்திரநாதனின் சிறுகதைத் தொகுதியான "தொலைநோக்கி" எனும் நூல் வெளியிடப் படவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (09)

# நடமாடும் மருத்துவ சேவையும் பொது சிரமதானப் பணியும்

வட்டக்கச்சி —

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நலவாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்காலிகக் குடியிருப்புகளில் நடமாடும் மருத்துவசேவையும், பொதுச் சிரமதானப் பணியும் நடைபெற்றது.

மாத்தளன் இடைதங்கல் முகாமில் வசித்துவரும் மக்களுக்கான மருத்துவ சேவையும், அந்தப் பகுதியில் சிரமதானப் பணியும் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. (இ)

# மாணவருக்கு சான்றிதழ் வழங்கல்

வட்டக்கச்சி —

பச்சிலைப்பள்ளி - பளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை கணினிப் பிரிவில் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பளை பிரதேச செயலக மண்டபத்தில் அன்றைய தினம் பிற்பகல் 1 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் இ.கார்த்திகேசு தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (09)

# இரண்டாம் கட்ட வீடமைப்பு திட்டம்

வட்டக்கச்சி —

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை தீர்த்தக்கரை மக்களுக்கு இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்தில் 60 நிரந்தர வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்றது.

சேவாலங்கா திட்ட முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அடிக்கல்லை சிலாவத்தை கிராம அலுவலர், மனித... அலுவலர், சேவாலங்கா திட்ட முகாமையாளர் ஆகியோர் நாட்டிவைத்தனர். (09)




ஒன்றாயிணைந்திருக்க ஓம் முருகா நீயருள்வாய்!

நல்லூரின் வீதியிலே நாங்களுனைத் தரிசிக்க
என்ன தவஞ் செய்தோமோ வேழபங்காளனே
எல்லோருமுனைத் தொழுதோம் எமக்கருள்வாய் முருகா!
இனின்னுந் தாமதமோ எங்களை இரட்சிக்க
பல்லோரும்பணிந்தேத்தும் பாலசுப்ரமண்யனே குகனே
பாதார விந்தமதில் ஆதாரந் தந்திடுவாய் குமரா
பொல்லா வினை போக்கிப் பொற்பாத கமலமதில்
ஒன்றா யிணைந்திருக்க ஓம்முருகா நீ யருள்வாய்!



கந்தா கடம்பா கதிர்வேலா
கார்த்திகேயா முருகா
சிந்தா குலந்தீர்த்தே எம்
சிந்தைதனில் நீ வருவாய்
எந்தா யுந் தந்தையுமாய்
எமக்கருளும் சண்முகனே
இந்தா என்றே இன்னருள் புரிந்து
காப்பாயே சரணமையா!

இராசையா ஸ்ரீதரன்

இராகம் ;- பிலஹரி தாளம் ;- ஆதி

பல்லவி

நல்லூரான் இருக்க நமன் பயம் வருமா
சொல்லுவீர் "முருகா" சுகம் பல தருமே!

அநுபல்லவி

வல்லவன் கந்தன் வழுத்துவீர் தினமே
நல்லவன் குகனே நினைத்திடு மனமே!

சரணம்

பக்தர்கள் காவடி பவனிஎயில் வருமே
வித்தகர்கள் மோனம் விடிவைத் தருமே
முத்தர்கள் யோகம் முழுமதி நிலையே
நித்தமும் நினைப்பின் நித்திய வாழ்வே



செல்லையா வல்லிபுரம்

எல்லை தாண்டியே அச்சம் சூழினும் எழிலகனே தஞ்சம் நீயடா...



நல்லை வீதியில் உனது தரிசனம்
நமது பயத்தை அகல வைக்குது
எல்லை தாண்டியே அச்சம் சூழினும்
எழிலகனே தஞ்சம் நீயடா
தில்லையாடிய கூத்தன் மைந்தனே
தேடும் விடிவினைச் சேர்த்து வையடா
அல்லல் தீர்த்திடும் நல்லைக் குமரனே
அவனி நலன்பெற அருள் செய்யடா!

நினைத்திடும் இதயம் தாராய்!

பேசினால் முருகனாகி
பெருத்த நல்லூரின் கண்ணே
சீரினால் உலகு வாழ
சிறந்தழ கிழமை யாடு
பாரினில் பரவிப் பாடி
பணிந்திடும் பதியே பாலா
நேரினால் நிறைவாய் நாளும்
நினைத்திடும் இதயம் தாராய்!



மு. பாலசுப்ரமணியம்

7 ஆம் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

கந்தன் அருளால் கரையொதுங்கும் துன்பமெல்லாம்
இன்பம் பெருகும் அவன் நாமம் உச்சரித்தால்



மகாராசி சில்க்ஸ்

Makharasee Silks



மங்கள நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

59, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

தொ.பே : 0777 - 286247

[C/5494]

நமது ஈழநாடு

சிந்தனைக்கு

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# கண்கெட்ட பின்.....!

திருகோணமலைத் துறைமுகத்தைத் தாக்க மாட்டோம் என்ற உத்தரவாதம் ஒன்றைப் புலிகளிடம் இருந்து பெறுவதற்கு அரசு நோர்வேயூடாக முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்குள்ளாகவே திருகோணமலையின் களநிலைமை மாற்றமடைந்து புலிகளின் கை ஓங்கிவிட்டது.

எந்த நேரத்திலும் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி- விநியோகம் தடைப்படும் நிலையில் தான் திருகோணமலை துறைமுகம் காணப்படுகிறது. இந்த நிலையில் புலிகளின் தாக்குதலில் இருந்து திருகோணமலைத் துறைமுகத்தைப் பாதுகாக்க முடியாத கட்டத்துக்கு அரசு வந்துவிட்டது.

ஏனெனில், மூதூர் பிரதேசத்திலும், மூதூர் இறங்குதுறையிலும் புலிகள் நிலைகொண்டிருக்கும் வரை திருகோணமலைத் துறைமுகத்தின் செயற்பாடுகள் கேள்விக்குறியாகவே இருக்கும்.

அது மட்டுமின்றி ஆப்பிழுத்த குரங்கு போலவே- திருகோணமலையில் பொல்லுக்கொடுத்து அடி வாங்கியிருக்கிறது அரசு.

இந்த நிலையில் இன்று மீள மீண்டும் பேச்சு நடத்தலாம் என்பது போலவும் சமிக்ஞைகள் வெளியிடப்படுகின்றன.

மாவிலாறு பிரச்சினையை பேசித்தீர்க்க சந்தர்ப்பம் இருந்தபோதும் அதனை உதாசீனம் செய்துவிட்டு போர்நடவடிக்கையில் இறங்கியது அரசு தான்.

இன்று அதேபோர் நடவடிக்கையில் பின்னடைவு காணத்தொடங்கியவுடன் பேசித்தீர்க்கலாம் என்று கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

அது மட்டுமின்றி திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்கு புலிகளிடமிருந்து உத்தரவாதத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக நோர்வேயின் உதவியும் நாடப்பட்டிருக்கிறது.

நோர்வே அனுசரணையாளர்கள் இன்று புலிகளுடன் பேசும்போது அதுகுறித்து வலியுறுத்தவும் கூடும். புலிகள் போரை நிறுத்தி- போர் நிறுத்த உடன்பாட்டுக்கமைய முன்னைய எல்லைக்கு திரும்பவும்- நோர்வே வலியுறுத்தக்கூடும்.

அதேவேளை, இப்போதுள்ள சூழ்நிலையில் புலிகள் அதைச்செய்வார்களா என்பது கேள்வி. ஏனென்றால் போர்நிறுத்த உடன்பாட்டின் அம்சங்களை அரசு அமுல்படுத்தாததன் விளைவாகத் தான் நிலைமை மோசமடைந்தது.

துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களையாமை, புலிகள் மீது நடத்திய நிழல் யுத்தம், அரசியல் போராளிகளை இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்களில் நயவஞ்சகமாக வேட்டையாடியமை, உயர் பாதுகாப்பு வலயங்களை விலக்கிக் கொள்ள மறுத்தமை என்று போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முரணான செயல்களைத் தான் அரசு செய்துள்ளது.


இதன் காரணமாகவே போர்நிறுத்தம் படிப்படியாக வலுவிழந்து போனது. இன்று புலிகள் இந்தப்பகுதிக்குள் முன்னேறிவிட்டனர் என்றவுடன் செயலிழந்து போன போர்நிறுத்த உடன்பாட்டை தூக்கிக்காட்டி புலிகளை விலகிச்செல்லுமாறு கோருவது எப்படி நியாயமாகும்?

இதனால் தான் போர்நிறுத்த உடன்பாட்டின் படி அரசு செயற்படுத்தத் தவறிய விடயங்களை நடைமுறைப்படுத்தினால் தான் புலிகள் எந்த வொரு இணக்கத்துக்கும் வரக்கூடும் என்ற எதிர் பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், அரசு நடைமுறைப்படுத்தத் தவறிய இந்த விடயங்களை இப்போது அமுல் படுத்த முனையும் என்று எதிர்பார்ப்பது கடினமானது. அரசுக்கு ஒருபுறம் கௌரவப்பிரச்சினை. ஆயினும், போர்நிறுத்தத்தை அமுல்படுத்த உத்தரவாதம் கொடுக்கவும் அரசின் மனம் இடம் கொடுக்காது.

எனவே, போர்களத்திலும் சரி, அரசியல் களத்திலும் சரி அரசுக்கு இப்போது ஆப்பு இழுத்த குரங்கின் நிலைதான்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com




# வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய சகல பிரிவினரதும் ஒத்துழைப்பு தேவை

## யாழ்.மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

எந்த வைத்தியசாலையிலும் ஊழியர்கள், பொறுப்பதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது மக்கள் கூடிய அக்கறை செலுத்தும் பட்சத்தில் அந்த வைத்தியசாலை விரைவில் முன்னேற்றம்அடைந்துவிடும். சங்கானை வைத்தியசாலையைப் பொறுத்த வரையில், தற்போதைய அபிவிருத்திச் சங்கமும் அதன் தலைவர் பொன்.சாம்பசிவம் உட்பட பொறுப்பதிகாரி எஸ்.சுபாசன் மற்றும் ஊழியர்கள் எல்லோரும் தமது கடமைகளை செவ்வனே செய்து எனது திணைக்களம் மூலம் எதைப் பெற வேண்டுமோ அதை உரிய நேரத்தில் பெற்று வைத்தியசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவதை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் 45ஆவது நிறைவு நாளையொட்டி சங்கானை மக்கள் வங்கிக் கிளையால் ஓர் கணினி பிரதியெடுக்கும் இயந்திரம் (பிரிண்டர்) இந்த வைத்திய சாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்த வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை பொறுப்பதிகாரி எஸ்.சுபாசன் தலைமையில் வைத்தியசாலையில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில் தெரிவித்ததாவது -

இந்த வைத்தியசாலையில் மட்டுமல்ல யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் விடுதி வசதிகள் குறைவாகவும், ஏற்கனவே உள்ள விடுதிகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமலும் இருந்து வருகிறது. ஒரே முறையில் எல்லா வைத்தியசாலைகளிலும் இந்தப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள நிதி வசதி பெறுவதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இருந்தும் இந்த வைத்திய சாலைக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் சுற்று மதில் உட்பட சிறு புனரமைப்பு வேலைகளுக்கு நிதி ஒதுக்கியதோடு, அவற்றைத் தனிப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மூலம் மேற்கொள்ளாது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஊடாகச் செய்வதற்கும் ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை தனதுரையில் தெரிவித்ததாவது -

ஏதோ ஒரு வகையில் நாம் எல்லோரும் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஏற்படுகிறது. வைத் தியசாலைக்குச் செல்லும் நாம் வைத்தியசாலைக்கு எம்மால் இயன்ற உதவியைச் செய்தால் என்ன? என்ற ஒரே நோக்கத்துக்காக மக்கள் வங்கியின் 45 ஆம் ஆண்டு நிறைவு நாளையொட்டி இந்த வைத்தியசாலையிலும், யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதியிலும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டோம்.

அத்துடன் நிற்காமல், சங்கானை மக்கள் வங்கி ஊழியர்கள் அனைவரும் சேர்ந்து ஓர் கணினி இயந்திரத்தையும் வைத்தியசாலைப் பாவனைக்கென வழங்கியுள்ளோம். மேலும் துடிப்புமிக்க பொறுப்பதிகாரியான சுபாசனும் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொன்.சாம்பசிவமும் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு சிறுவர் பூங்காவையும் அமைத்துக் கொடுப்பதற்கு முன் வந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# புல்மோட்டைக் கடலில் மீன் பிடிக்கத் தடை

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கடற்படைக்கும் இடம் பெற்ற மோதலையடுத்து நேற்று முன்தினம்முதல் புல்மோட்டைக் கடலில் இராணுவத்தினரால் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

புல்மோட்டைக் கடலில் நாளொன்றுக்கு மீன்பிடியில் ஈடுபடும் 375 படகுகளுக்கிடையே விடுதலைப் புலிகளின் படகுகளும் நுழைந்து கடற்படைப் படகுகளின் மீது தாக்குதல் நடத்தலாமென்பதாலேயே மீன்பிடிப்பதற்குத் தற்காலிகமாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்களின் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடித் தொழில் காணப்படுவதால், அவர்களுக்கு மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டதால் ஆதரவற்றுப் போயுள்ள அவர்கள் - தங்களுடைய கிராமங்களை விட்டு வெளியேறி நீர்கொழும்பு, தொடுவாவ மற்றும் புத்தளம் போன்ற இடங்களுக்குச் சென்ற வண்ணம் உள்ளனர். (தே)

### பாதிக்கப்பட்ட மக்களுக்காக

# 15 லட்சம் அமெரிக்க டொலரை நோர்வே அரசு வழங்குகிறது

திருகோணமலை —

திருகோணமலை - மூதூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தின் விளைவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவியாக 15 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க நோர்வே முன்வந்துள்ளது.

இந்த நிதியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகவோ அல்லது தன்னார்வ நிறுவனங்கள் ஊடாகவோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக சென்றடைய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் வெற்றிடத்தை நிரப்ப ஆராய்வு!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு —


கண்காணிப்புக் குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கான பல்வேறு வாய்ப்புகள் குறித்து தாம் ஆராய்ந்து வருவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றி[illegible]ப் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவில் நடுநிலையாளராக அங்கம் வகிக்க இயலாது. ஆகவே கண்காணிப்புக் குழுவில் இருந்து அவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்று விடுகலைப்புலிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் வெளியேறுவதற்கு முடிவெடுத்தனர். அதனைத்தொடர்ந்து சுவீடனும் தனது பிரதிநிதிகளை வெளியேற்றியது.

இதனைத் தொடர்ந்தே ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பத்தாம் ஆராய்ந்து வருவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது -

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவ்வளவு எளிதல்ல என்றும், ஐ நா. உதவியைப் பெறுவது உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.



# மீண்டும் நாடு திரும்புவாரா முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

**சிங்கள நாளிதழான 'லங்காதீப' வில் கடந்த மாதம் 27 ஆம் திகதி 'சந்திரிகாவின் பாத்திரம்' என்ற தலைப்பில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்**

**1991** ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அப்போதைய எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினராக இருந்த ஜெகத் பெர் னாண்டோ அரசாங்க கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியிடம்



நாடாளுமன்றத்தில் ஆச்சரியமான வினா ஒன்றை எழுப்பினார்.

சந்திரிகா இலங்கைக்கு வருவதால் இவ் வளவு பயம் ஏன்? அவர் அவ்வாறு கேட்கும் போது சந்திரிகா இருந்தது இங்கிலாந்தில். சந்திரிகா இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வரப்போவதாகக் கூறி, அவரை விமர்சித்து நாடாளுமன்றத்தை இரண்டாக்கிய போதே அவர் அவ்வாறு கேட்டார்.

1991 ஆம் ஆண்டு சந்திரிகா இலங்கைக்கு வருவதையிட்டு - ஐக்கிய தேசியக்கட்சியில் மாத்திரம் அன்றி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியி னுள்ளும் ஒரு குழுவினர் அச்சத்துடன் இருந்தார்கள். இதற்குக் காரணம் சந்திரிகா இலங்கை வருவதற்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட் சியை தமது கையில் எடுத்தவர்கள் - சந்திரிகா வந்தால் கட்சியை அவரது கரத்தில் எடுத்துக் கொள்வார் என்று அவர்கள் அஞ்சியமையாலேயே.

ஜெகத் நாடாளுமன்றத்தில் அவர்களி டம் கேட்டது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினருக்கு குத்துவதற்கே. இப்போது சந் திரிகா இருப்பது இங்கிலாந்தில். இதோ! இப் போது மீண்டும் அவர் இலங்கைக்கு வரப் போகிறார் என கதை பரவிக்கொண்டு இருக்கிறது. அன்று போன்று இன்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் ஒரு பிரிவினர் அவர் வரப்போவதாக சொல்லும்போது கலவரம் அடைகிறார்கள்.

அது ஏன்? இது சந்திரிகாவின் அரசியல் வரலாறு முழுவதிலும் காணக்கூடிய ஒன்று. சந்திரிகா இலங்கைக்கு வந்தால் அது அவரது மூன்றாவது அரசியல் பயணம். அவரது முதலா வது அரசியல் பயணம் ஆரம்பமானது - 1977 ஆம் ஆண்டு தோல்வியின் பின்பு. அவ்வேளை யில் கட்சியில் அவர் தொடர்புபட்டு அரசியல் செய்வதற்கு நாயக்க, சந்திரிகாவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிப்பதற்கான யுத்தத்தை எடுத்துச்சென்றார். கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான - சீ.பி.ரட்ணாயக்க மற்றும் ஹெக்டர், கொப்பேகடுவவும் அதற்கு ஆதரவு அளித்தனர். மைத்திரிபால, அநுர ஆகியோர் உட்பட்ட குழுவினர் அதனை எதிர்த்தனர். அதன் பெறுபேறாகவே கண்டி இரண் டாகியது. இறுதியில் சந்திரிகா நாடாளுமன்றம் வருவது இல் லாமல் போயிற்று.

1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு பின்பு நடத்துவதற்கு தீர்மானித்திருந்த பொதுத் தேர்தலுக்கு சந்திரிகாவை மீண்டும் நாடாளு மன்றத்துக்கு கொண்டு வருவதற்கான சந்தர்ப் பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இடம் கிடைத்தது. அவரையும் விஜய குமாரதுங் கவையும் நாடாளுமன்றம் செல்வதற்கு தடுப் பதற்காக கட்சிக்குள்ளேயே ஒரு குழுவினர் பொதுத் தேர்தலை நடத்தாமல் இருக்கும் நோக்கில் வைக் கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்தார்கள். அத னாலும் சந்திரிகாவுக்கு நாடாளுமன்றம் செல்லும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது.

அந்த சர்வஜன வாக்கெடுப்பின் பின் சிறிலங்கா சுதந் திரக்கட்சி உடைந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தனக்கு அரசியல் செய்வதற்கு கட்சி யில் ஒரு குழுவினர் இடம் தரமாட்டார்கள் என் பதை தெரிந்து கொண்டே விஜயகுமாரதுங்க கொல்லப்பட்ட பின்பு - சிறிலங்கா சுதந்திரக்கட்சி இன்றி அரசியல் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டே சந்திரிகா வெளிநாட்டில் தங்கிக் கொண்டார்.


அந்த இடத்திலிருந்து தான் அவரது இரண் டாவது பயணம் ஆரம்பமானது. 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வி யடைந்து மனோ ரீதியிலும் உடல் ரீதியிலும் நோய்வாய்ப் பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கவின் வெற் றிடத்தை நிரப்புவதற்கும், தலைமைத்துவத்தை எடுப்பதற்கு அல்லது சிறிமாவோ தலைமைத் துவத்தில் இருக்கும் போது கட்சியின் அதி காரத்தை தங்களிடம் எடுத்துக்கொள்ள முயற்சிக்கும் கட்சியின் ஒரு குழுவினருக்கு எதிராக யுத்தம் புரிவதற்கும் சிறிமாவின் தலைமைத் துவத்தை பலமுள்ள தாக்கி, கட்சியின் அதி காரத்தை தங்கள் கரங்களில் எடுக்க வேண்டி யது கட்சியின் இன்னொரு பகுதியினருக்குத் தேவையாக இருந்தது.

அவர்கள் கட்சியின் அதிகாரத்தை பாது காத்துக்கொள் வதற்கு சந்திரிகாவை இலங்கை க்கு தேவை இருந்தும் கட்சியின் உள்ளேயே ஒரு பிரிவினர் அவர் கட்சிக்குள் வருவதை விரும்பவில்லை.

ஆனால், 1980 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அர சாங்கம் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜா உரிமையை ரத்து செய்தபோது காலியான அத்தலகல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவரை நியமிக்குமாறு அத்தலகல்ல அதிகார சபை கோரிக்கை விடுத்தது. இதனால் கட்சியினுள் ஒரு பகுதியினர் கலவரம் அடைந் தனர். அத்தலகல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அநுராவின் பெயரைக் குறிப்பிடுமாறு அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் அப்போது கட்சி யின் செயலாளராக ரட்ணசிறி விக்கிரம வந்து கட்சியில் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்கள் சிறி மாவோவை பாதுகாத்துக்கொண்டு கட்சியின் அதிகாரத்தை தங்கள் கையில் எடுக்கும் விதம் பற்றி இங்கிலாந்தில் இருக்கும் சந்திரிகாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு திட்டம் தீட்டினார்கள்.

ஆனால் கட்சியின் மற்றைய குழுவின ருக்கு சந்திரிகாவை இங்கிலாந்தில் தக்கவைத் துக் கொள்வதே தேவையாக இருந்தது. சந் திரிகா மீண்டும் இலங்கைக்கு வரமாட்டார் என அவர்கள் மந்திரம் உச்சரிப்பதைப் போன்று பிரசாரம் செய்தார்கள். நாட்டில் நிலவிய பயங் கர அழிவு நிலவரம் காரணமாக சந்திரிகா மீண்டும் இலங்கைக்கு வரமாட்டார் என அவர்கள் நினைத்தார்கள். அவர்களுக்கு



திகைப்பு ஏற்படும் விதத்தில் சந்திரிகா இலங்கைக்கு வந்தார். ஆனால், அவர் சிறிலங்கா சுதந் திரக்கட்சியில் தொடர்புபடுவதை நினைத்துக் கூட பார்ப்பதற்கு இடமளிக்காத அளவுக்குக் கட்சியின் உள்ளேயே எதிர்ப்பை உருவாக்கி விட்டார்கள்.

இறுதியில் அவர் ஐக்கிய சோசலிச முன்னணியின் ஊடாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் கூட்டமைப்பை ஏற்படுத்தி சிறி லங்கா சுதந்திரக்கட்சியினுள் உள்நுழையும் முயற்சியைத் தேடினார். அவர் மீண்டும் கட்சி யில் இணையக்கூடாது என அவருக்கு எதிராக ஒரு குழுவினர் மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆனால் திடீரென சிறிமாவோ அவரை கட்சியில் சேர்த்துக் கொண்டது மாத்திரமன்றி அவருக்கு அத்தனகல அதிகார சபையையும் கையளித்தார்.

இது குருவிக்கூட்டில் கல் எறிந்தது போல் ஆயிற்று. அதன் பிரதிபலனாக கட்சி இரண்டாகி ஒரு குழுவினர் ஐக்கிய தேசியக்கட் சியுடன் இணைந்து கொண்டனர். தனது முதலாவது அரசியல் பயணத்தை இங்கிலாந்தில் முடித்துக் கொண்ட ஜனாதிபதி தனது இரண்டாவது பயணத்தை முடித்துக்கொண்டது ஜனாதிபதி மாளிகையிலாகும்.

*தொடரும்...*

**தமிழில் - நாடோடி**

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**நான்காம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

**விதிமுறைகள்**

- ★ 'நவீன உலகில் ஊடகங்களின் ஆதிக்கம்' என்ற தலைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.
- ★ மாணவரது சுயஆக்கம் என்பதை பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்.
- ★ கட்டுரை - கையெழுத்தானால் 4 பக்கமும், தட்டச்சுப் பதிவா னால் 2 பக்கமும் அமைதல் வேண்டும்.
- ★ ஏற்கனவே பிரசுரமானவற்றையோ அல்லது வேறொருவரின் உதவியுடனோ எழுதி அனுப்புதல் ஆகாது.

**போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

நான்காம் ஆண்டு நிறைவு
கட்டுரைப் போட்டி
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 31-08-2006

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**நான்காம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் கலை- இலக்கிய கார்ட்டூன் போட்டிகள்**

**நமது ஈழநாடு பத்திரிகை நான்காம் ஆண்டு நிறைவை யொட்டி கலை - இலக்கிய - கார்ட்டூன் போட்டிகளை நடத்தவுள்ளது.**

**போட்டிகளுக்கான விதிகள்**

***சிறுகதை மற்றும் கவிதை - கார்ட்டூன் போட்டி-***

- ★ படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழி பெயர்ப்புக்கள் நிரா கரிக்கப்படும்.
- ★ சிறுகதை - தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ, தட் டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத் தானால் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சானால் 5 பக்கங்களுக்கும் இருத்தல் வேண்டும்.
- ★ கவிதைகள் மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக்கவி தையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ★ படைப்புக்கள் சமகால சமூகவியல் - வாழ்வியலை மைய மாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ★ கார்ட்டூன் தமிழ் மக்களின் சமகால வாழ்வியல் சூழலை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ★ பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்
- ★ நமது ஈழநாடு ஊழியர்களும், குடும்பத்தினரும் இதில் பங்குபற்ற முடியாது.

***போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி -***

கலை, இலக்கிய
கார்ட்டூன் போட்டி
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 31-08-2006

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)

பொதுமுகாமையாளர் இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்காக கோரப்படுகின்றன.

| இல | வேலையின் விபரம் | இட்டாற் தரம் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | வேலை முடிக்கப் பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | யாழ் பஸ் நிலையத்தில் நிழற் குடைகள் 02 அமைத்தல் | எம்.06 | 1500/- | 71,000/- | 04 மாதம் |
| 02 | யாழ் பஸ் நிலைய கட்டட விரிவாக்கம் | எம்.07 | 1000/- | 38,500/- | 04 மாதம் |

01. மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் ICTAD தரத்தைக் கொண்டிருப்பதுடன், ICTAD அறிவுறுத்தல்களுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வித் தகவைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் புதுப்பித்த தகவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற ஒப்படைக்க வேண்டும்.

02. மீளளிக்கப்படும் வைப்பு, மீளளிக்கப்படாத வைப்புத் தொகைகள் யாவும் பணமாகவோ அல்லது பொதுமுகாமையாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (DRAFT) சமர்ப்பித்து சிவில் பொறியியலாளர் இ.போ.ச (வ) அவர்களிடமிருந்து 18.08.2006 ஆம் திகதி 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. மூடப்பட்ட கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, இ.போ.ச (வடக்கு), கோண்டாவில் என்னும் முகவரிக்கு 21.08.2006 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்னதாக அனுப்பி வைப்பதுடன் உடன் கேள்விகள் திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரர் அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

04. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்தச் செலவீனங்களுக்கும் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

க. கணேசபிள்ளை,
பொதுமுகாமையாளர், இ.போ.ச (வடக்கு).

[C/5495]

## நூல்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா ஆசிரமம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்துள்ளது. ஆசிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா இந்த நூல்களை கல்லூரி அதிபர் எஸ்.குட்டித்தம்பியிடம் கையளித்தார்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கும் அதிபர் கே.சிவானந்தனிடம் ஒருதொகுதி நூல்களை ஆச்சிரமம் அன்பளிப்பு செய்துள்ளது.

ராஜா யாழ்ப்பாணம்




காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

மனோகரா யாழ்ப்பாணம்

நான்காவது வெற்றி வாரம்

ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த திருட்டு பயலே

06.08.2006 முதல் டிஷ்யூம் புகழ் ஜீவா, கோபிகா, மோகன்லால் நடித்த

அரண் (புதிய வெளியீடு)

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

காட்சி நேரம் 10.30,2.30,6.30.

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் பிறந்து
ஆண்டவனிடம் சென்று
ஆண்டு ஒன்று ஆகின்றது.
ஆனாலும்,
உன் அன்பான முகமும்
பண்பான குணமும்
இன்னும் எம் இதயக் கோவிலில்
பதிந்துள்ளது.
ஏத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள்
மனதில் நீயிருப்பாய்.
உனது ஆத்மாசாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

அமரர்
தருமையா தேவரஞ்சன்


மண்ணக வாழ்வில் 1981.03.03
விண்ணக வாழ்வில் 2005.07.17

உன் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

புதுறோட், காரைநகர்

[2330]

## கண்ணீர் காணிக்கை



அமரர்
பொன்.கணேசமூர்த்தி

தமிழுக்காய் உம்மை
அர்ப்பணித்த பெருமகனே!
தமிழை எழுதினாய்,
தமிழுக்காய் எழுதினாய்,
தன்மானம் காக்க எழுதினாய்,
கதைகள், கவிதைகள், நாடகங்கள்
ஏதில்லை உன் எழுத்தில்.
வளமாக மட்டும் நீ வாழவில்லை;
தளமாக வாழ்ந்தீர் தமிழுக்கு:
உரமாகப் போனீர் தமிழ் மண்ணுக்கு.
பண்பாளனே! தமிழுக்கு உன்னை அர்ப்பணித்தாய்.
உமக்கு அர்ப்பணிக்க ஏதுண்டு எம்மிடம்?
அன்பு கலந்த நன்றியைத் தவிர...


அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்.

[C/5497]

## கண்ணீர் அஞ்சலி

கண்கள் எதற்கு அழுவதற்கா...
அதுதான் எமது காணிக்கையா....



அமரர்
பொன்.கணேசமூர்த்தி

பொன்.கணேசனே!
உங்களை இழந்து தமிழ் மண் வெறுமையாய் போனதே!
மனிதன் ஒருவன் மறுதலிக்க...
மானிடம் உங்களைப் பரிகசிக்க...
அப்படி ஒன்றும் செய்யவில்லையே நீங்கள்!
கால் மிதித்த புல்லும் கருகி விடாதே...
நீங்கள் காதலித்த தமிழ் அல்லவா
கற்றோரின் நெஞ்சமெல்லாம் நதியாகப் பாய்கிறது
நீங்கள் எழுதவும், நாங்கள் படிக்கவும்
ஆசையுடன் அல்லவா காத்திருந்தோம்.
பாடல்கள், கதைகள், நாடகங்கள் என்றெல்லாம்
எழுதி வடித்த உங்கள் பேனா இனி எதனை எழுதும்
வங்கியில் மட்டுமல்ல ஐயனே!
எங்கள் உள்ளமெல்லாம் உயர்ந்தவன் நீ
நெஞ்சமெல்லாம் நிறைந்தவன் நீ!
மண்ணை விட்டு மறைந்ததேன்?
துடிக்கிறோம்... தவிக்கிறோம்.... அதையே நினைந்து.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நமது ஈழநாடு குடும்பத்தினர்.

ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படுகொலைகளை கண்டித்து வங்கியாளர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் —

மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று வங்கி ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

காங்கேசன்துறை மக்கள் வங்கி கிளை முகாமையாளர் நேற்றுக் காலை வங்கிக்கு பணிக்குச் செல்லும் போது வழிமறித்து சுட்டுக்கொல்லப் பட்டார்.




வங்கியாளரின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சகல வங்கி ஊழியர்களும் ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கி கிளைக்கு முன்பாக ஒன்று கூடி அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மக்கள் வங்கி கிளைக்கு முன்பாக - வங்கியாளர்கள் கொலை செய்யப்படுவதை நிறுத்தக்கோரியும், படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்து சிலமணி நேரம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வங்கி ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு காரணமாக யாழ். நகரிலுள்ள வங்கிகள் அனைத்தும் நேற்று நண்பகலுடன் செயலிழந்தன. இதனால் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் வங்கிகளுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

## சடலங்கள் ஒப்படைப்பு நேற்று நடைபெறவில்லை

திருகோணமலை —

மனிதாபிமான பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் படையினரின் சடலங்களை ஒப்படைக்கும் நிகழ்வு நடைபெறவில்லையென சம்பூர் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாக தமிழ்நெற் செய்தி வெளியிட்டுள்ளது.

மூதூரில் விடுதலைப் புலிகளுடனான மோதலின்போது 40 படையினரின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெறவிருந்தது.

ஆனால் மோதலின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான பணிகள் மேற்கொள்ளப்பட்டமையால் சடலங்களை கையளிக்கும் நிகழ்வு நடை பெறவில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்ததாக தமிழ்நெற் செய்தி வெளி யிட்டுள்ளது.

இதேவேளை நேற்று மூதூர் பிரதேசத்துக்குள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் கிளைமோர்; நான்கு பொலிஸார் காயம்!



வவுனியா —

வவுனியா - பூந்தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ரோந்து சென்ற பொலிஸார் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 3 பொலிஸார் காயமடைந்தனர்.

பூந்தோட்டம் பகுதியிலுள்ள காவலரண் மீது நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸ் மீதே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட நான்கு பொலிஸார் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை இந்த தாக்குதலையடுத்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. நேற்றுக்காலை பொலிஸார் அந்தப்பகுதியில் தேடுதல் நடத்தியபோது இளைஞர் ஒருவர்- கிளைமோர் மற்றும் கிரனேட் ஆகியவற்றுடன் சடலமாக மீட்கப்பட்டார். இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## வவுணதீவில் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வுவணதீவில் இராணுவ முகாம் மீது நேற்றுக்காலை 7 மணியளவில் நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இவர் உடனடியாக பொலனறுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## திருமலையில் ஹர்த்தால் நகரம் செயலிழப்பு!

திருகோணமலை —

திருகோணமலையில் தமிழ் பிரதேசங்களில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தால் காரணமாக அரச திணைக்களங்கள், பாடசாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கவில்லை.

அதேவேளை, போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை.

திருகோணமலை - மூதூரில் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ள வேளையில் திருகோணமலை நகரில் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆயிரக்...

தங்கியிருக்கின்றனர்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கான எந்தவிதமான மனிதாபிமான பணிகளும், எந்தவொரு அமைப்பாலும் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மூதூர் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்களையடுத்து - மூதூரில் வசித்து வந்த முஸ்லிம் மக்களில் நாற்பது வீதமானோர் நேற்றைய தினம் கால்நடையாக கிளிவெட்டிக்குச் சென்றனர். இவர்கள் அங்கிருந்து கந்தளாய்க்குச் செல்லவுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றுக் காலை 6.20 மணியளவில் தோப்பூரை நோக்கி படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் 8 முஸ்லிம்கள் காயமடைந்தனர். இவர்கள் தோப்பூர் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனிடையே கடந்த மூன்று நாட்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மீது நடத்தப்பட்ட விமானம் மற்றும் ஷெல் தாக்குதலில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 42 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

## மக்கள்...

56 வயதான பொன்னுத்துரை கணேசமூர்த்தி துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனைகளை நடத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## உதவிப்...

சங்க வாகனங்கள் மீண்டும் திருமலைக்குத் திரும்பின.

இதேவேளை, நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் படுகாயமடைந்த பலர் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பச்சனூரில் ஷெல்...

மக்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 05 முஸ்லிம்கள் இந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெயர்ந்த மக்கள் வெள்ளைக் கொடியுடன் வந்த போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேவேளை, முதூரில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் மேலும் 5 முஸ்லிம்கள் பலியானதாக தெரியவருகிறது. எனினும் இது தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் ஷெல் தாக்குதல்களில் 30க்கும் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாகவும் - 100 க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

## திருமலை சமர்...

துணுக்காய் தோரங்கண்டல்.

02.08.2006 அன்று திருமலை கடலில் படையினருடனான மோதலின் போது கப்டன் இசைஅருவி (ஞானப்பிரகாசம் டயானா) யாழ். மாவட்டம்

வீரவேங்கை வீரக்கோன் (கார்த்திகேசு கேதீஸ்வரன்) இல.60 ஸ்கந்தபுரம்

01.08.2006 அன்று திருமலை துறைமுகத்தில் கடற்படையின் கடற்கலங்களை வழிமறித்து தாக்கியதன் போது வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் நிலாவேந்தி (உமையாள் திருமகன் - தவராணி) யாழ். மாவட்டம்

மேஜர் அலைஅழகி (சுந்தரலிங்கம் தாட்சாயினி) யாழ். மாவட்டம்

லெப்.கேணல் சூரியா (செல்லையா றோசாமலர்) யாழ். மாவட்டம்

கப்டன் இசையரசன் (எதிர்வீரசிங்கம் கேதீஸ்வரன்) யாழ். மாவட்டம்

வீரவேங்கை சூட்டி (தருமலிங்கம் சுரேஸ்ராஜ்) அம்பாறை திருக்கோவில்

02.08.2006 அன்று மூதூர் கடலில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த லெப்.கேணல் தென்றல் மாறன் (செல்வநாயகம் கமலகாசன்) கல்மடு வவுனியா

ஆகிய மாவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கட்டைப்பறிச்...

விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கான ஆள்கூறை இந்தப் படை முகாமிலிருந்து கணிப்பீடு செய்து பீரங்கிப்படையினருக்கு வழங்கும் முக்கிய தளமாக ஜீ.பி.எஸ் படை முகாம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

## படை நகர்வு...

(வயது 45), குழந்தை வேல் சிவரத்தினம் (வயது 12) ஆகியோரே படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களாவர்.

வாகரைக்கும் பனிச்சங்கேணிக்கும் இடையில் நோயல் குடியிருப்பிலுள்ள தமது வீட்டில் இருந்தபோதே ஷெல் வீழ்ந்து வெடித்தபோது இந்த மூவரும் உயிரிழந்தனர்.

கிரிமிச்சையிலுள்ள படையினரின் முன்னரங்க காவலரணில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பனிச்சங்கேணியிலுள்ள புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதே படையினரும், துணை ஆயுதக் குழுவினரும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு உதவியாக வாழைச்சேனை காகித ஆலை இராணுவ முகாம் மற்றும் கரடிக்குளம் ஆகிய முகாம்களில் இருந்து கடும் ஆட்லறி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதிகாலை 4 மணிமுதல் தொடர்ச்சியாக 5 மணி நேரம்வரை இந்தத் தாக்குதல்கள் நிகழ்ந்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து பெருமளவான பொதுமக்கள் இடம்பெயர்ந்து காடுகளுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, நேற்றுக்காலை புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட படையினரால் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## படையினரே...

நூற்றுக்கணக்கான மக்கள் சோதனைச்சாவடியில் நின்ற வேளையில் அவர்கள் மீது அருகில் இருக்கும் இராணுவ முகாலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

உடனடியாக இவ்வாறான ஷெல் தாக்குதல்களை நிறுத்துவதுடன், இந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தற்காலிகமாக பகைமைகளை கைவிட்டு இணக்கப்பாட்டை ஏற்படுத்தவேண்டும்.

இது தொடர்பாக குறித்த தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்குமாறு டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத் தலைமைகளையும், இஸ்லாமிய நாடுகளின் அமைப்புக்கள் உள்ளிட்ட சர்வதேச சமூகத்தையும் கோரியுள்ளோம்.

அரசாங்கம் - பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதலை நிறுத்துவதுடன், இரு தரப்பினரும் போரைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கக் கூடிய ஒரு சாதகமான சூழ் நிலையை தோற்றுவிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## நேற்றும் உக்கிர...

வசதியாக நேற்றுக்காலை தற்காலிக போர் ஓய்வு ஒன்றைக் கடைப்பிடிக்க இணக்கம் காணப்பட்ட நிலையிலேயே படையினர் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

நேற்று சுமார் ஒரு மணிநேர மோதல் தவிர்ப்பை இரு தரப்பும் கடைப்பிடிப்பதற்கு முன்வந்த நிலையில் - பிற்பகல் 12.30 மணியளவில் கடற்படையினர் உக்கிர தாக்குதலை மூதூர் இறங்குதுறையில் இருந்த புலிகள் மீது மேற்கொண்டனர்.

பல்குழல் பீரங்கிகள், ஆட்லறிகளின் உதவியுடன் இந்தத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது சம்பூரிலிருந்து கடல்வழியாக கிடைக்கும் உதவிகளையும் தடுத்து கடற்படையின் விசேட கொமாண்டோப் படைப்பிரிவு இந்தத் தாக்குதலை நடத்தியதாக படைத் தரப்பு தெரிவித்தது.

பல மணிநேரம் நீடித்த கடும் சமரில் - கடற்படையினரின் டோறா அதிவேகத்தாக்குதல் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும், 12 கடற் படையினர் பலியானதாகவும் தகவல் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை, தாம் நடத்திய தாக்குதலில் புலிகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்தது. நூற்றுக்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டும், நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும்- புலிகளின் 9 சடலங்களையும் , ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியதாகவும் படைத்தரப்பு கூறியுள்ளது.

இந்தச் சமரில் 12 கடற்படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்த சமர் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

நேற்று இரவும் மூதூர்ப் பகுதியில் உக்கிரமான ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. மூதூருக்கு ஆயிரக்கணக்கான மேலதிக படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான படையினர் மூதூரை அண்டிய பகுதிகளில் குவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நேற்று தோப்பூர், பட்டியடி பகுதிகளில் ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் நகர்வு முயற்சியை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது .

எனினும் இந்த மோதல்களில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பான உத்தியோக பூர்வ தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.08.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.